24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 17 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 01, 2014

# ரொறொன்ரோ மாநகரசபை தேர்தல்

எதிர்வரும் ஒக்ரோபர் 27, 2014 இல் ரொறொன்ரோ மாநகரசபைக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் 44 மாநகரசபை உறுப்பினர்கள் (City Councillors), ரொறொன்ரோ பாடசாலைகள் சபைக்கான உறுப்பினர்கள் உட்பட ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் தெரிவு செய்யப்பட உள்ளார்கள். இதேவேளை ஒக்ரோபர் 27, 2014 இல் ஒன்ராரியோ மாகாணம் முழுவதற்குமான உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உறுப்பினர்களும், முதல்வர்களும் தெரிவு செய்யப்படுவர்.



இம்மாநகரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களாக வர போட்டியிட விரும்புவோர் செப்ரெம்பர் 11, 2014 வரை தங்களது நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்யலாம். ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் பதவிக்கு தற்போதைய மாநகரசபை முதல்வர் றொப் ஃபோர்ட் அவர்களும் போட்டியிடுகிறார். இதுவரை 69 பேர் ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் பதவிக்கு தாங்கள் போட்டியிடப்போவதாக நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்கள். ஓகஸ்ட் 26, 2014 இல் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை வெளியிட்ட கணிப்பீடுகளின்படி முன்னிலையில் நிற்கும் முதல் நான்கு மாநகரசபை முதல்வருக்கான வேட்பாளர்களும் அவர்களுக்கு கிடைத்த வாக்குகளும் பின்வருமாறு:

| | |
|---|---|
| John Tory | 35% |
| Rob Ford | 31% |
| Olivia Chow | 23% |
| David Soknacki | 4% |

இதில் முன்னிலையில் நிற்கும் John Tory ஒன்ராரியோ மாகாணத்தின் பழமைவாதக் கட்சியின் தலைவராக 2004 இல் இருந்து 2009 வரை பதவி வகித்தவர். CFRB வானொலியில் ஒலிபரப்பாளராகவும் கடமையாற்றியவர். இவர் ரொறொன்ரோ மாநகர சபைமுதல்வர் பதவிக்கு 2003 ஆம் ஆண்டு போட்டியிட்டு David Miller இடம் தோல்வியடைந்தவர். Rogers Media நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக (CEO) John Tory பணியாற்றியவர். மே 28, 1954 இல் John Howard Tory ரொறொன்ரோவில் பிறந்தவர். இவர் ரொறொன்ரோ பல்கலைக்கழக கலைப்பட்டதாரி ஆவார். பின்னர் York University யில் சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். இவர் 1978 இல் Barbara Hackett யை மணந்தார்.



இவரது முக்கிய கொள்கையாக ரொறொன்ரோ மாநகர போக்குவரத்தை சீர் செய்வது இருக்கிறது. இதற்கு இவர் (DRL) Downtown Relief Line எனப்படும் ஒரு நிலக்கீழ் தொடரூந்து பாதை அமைக்கப்போவதாக கூறுகிறார். இந்த நிலக்கீழ் தொடரூந்து பாதை தற்போதைய Bloor -Danforth நிலக்கீழ் தொடரூந்து பாதைக்கு தெற்கில் இதற்கு சமாந்தரமாக சென்று ரொறொன்ரோவிற்கு கிழக்கு மற்றும் மேற்கு எல்லையில் வடக்கு நோக்கி செல்லும். இதைவிட இவரது Smart Track திட்டம் GO தொடரூந்து பாதையை Unionville இல் இருந்து Scarborough இற்கு ஊடாக Union Station வரை அமைத்து அங்கிருந்து Mississauga இற்கு நீடிப்பது ஆகும்.

ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் வேட்பாளர்களில் இரண்டாம் இடத்தில் இருப்பவர் தற்போதைய முதல்வர் Rob



Ford ஆவார். இவர் ரொறொன்ரோ மாநகரசபை முதல்வராக முதல்முறை ஒக்ரோபர் 25, 2010 இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு 47% வாக்குகளைப்பெற்று வென்றவர். அப்போது இவரது முக்கிய கொள்கையாக ரொறொன்ரோ மாநகரசபை யின் அபரித செலவுகளை குறைத்தல் (Stop the gravy train) இருந்தது. தான் முதல்வராக வந்தால், வரி வீதத்தை 10%ஆல் குறைப்பேன். தொழிற்சங்கங்களு டன் கடுமையான போக்கை கடைப் பிடிப்பேன். மாநகரசபை குப்பை அள்ளுவதை தனியாரிடம் ஒப்படைப்பேன்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage
*Independently Owned and Operated

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
11583 Yonge Street
Richmond Hill, Ontario L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.
Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# HOUSE FOR SALE

**By Owner**

**MORNINGSIDE & STAINS**






Excellent bright house facing East side & the house number is 24. It has 5 + 3 bedrooms (2 with walk-in closets) and 4.5 bathrooms with 2 exit doors from the master bedroom's washroom to go to another bedroom. In main floor: kitchen with dry storage room, family room, living room, dining room and powder room. Basement has 2 separate units. 2 bedroom apartment + bachelor's (both unit' rent is $1400.00). 2 car parking garage+ 4 cars parking on the driveway. New Canadian Maple hardwood flooring, no carpet even in the basement. Separate washer/dryer for basement and upper floors. Owned hot water tank + central A/C + central vacuum + gas fireplace + garage door opener. Backyard backs into a park. School in view of home. Steps to TTC. Plaza, close to shopping centre and highway 401. One bus to UTSC.(10 min.) Furnishing is also available.

**Call: 647.856.2205 / 647.907.7345**

*Please Real Estate Agents do not call.*



Allstate. You're in good hands.

**Allstate Insurance Company Of Canada**

**Home & Auto Insurance**

**வீடு, வாகன காப்புறுதி**




**Suren Navaratnarajah**
**(Agent)**

**Cell: 416.520.6916**

E-mail: snavaratnarajah@allstate.ca
4525 Kingston Road
Unit H5 Scarborough, ON M1E 2P1
Office: 416.283.0544 x 5012


CELEBRATING 25 Years
Vlambaram Publications inc.

# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

<u>போட்டி 1</u>
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 2</u>
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)

1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

<u>போட்டி 3</u>
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 4</u>
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5″-11″ (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# சுவாமியின் இலங்கை விஜயமும் கூட்டமைப்பின் இந்திய பயணமும்!

- விகிர்தன் -

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

இந்தியாவின் புதிய பிரதமராக பதவி யேற்றுள்ள நரேந்திர மோடி அவர்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு சந்தித்திருக்கின்றமை சமகால அரசியலில் ஒரு முக்கிய விடயமாக பார்க்கப்படுகின்றது. மோடி இந்தியப் பிரதமராக பதவியேற்ற குறுகிய காலத்திலேயே இச்சந்திப்பு நிகழ்ந்திருப்பதும், மோடியின் அழைப்பின் பேரிலேயே தமிழ் தேசியக்கூட்டமைப்பின் குழு இந்தியா சென்று அவரை சந்தித்து உரையாடியிருப்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயம்தான். இந்தியாவின் முக்கிய பிரதிநிதி போன்றும், பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் என்ற தோரணையோடும் இலங்கைக்கு வந்து அதிரடியாக சில கருத்துக்களை வெளியிட்ட சுப்பிரமணியன் சுவாமி, வந்து போன சில நாட்களிலேயே கூட்டமைப்பினர் இந்தியா சென்று பிரதமர் மோடியை சந்தித்திருப்பது தமிழர்களுக்கு சற்று உற்சாகமான விடயமாகவும், சிலருக்கு எரிச்சலூட்டும் விடயமாகவும் மாறியுள்ளது. ஊடகங்களில் சில வேளைகளில் தவறான செய்திகள் வருகின்றன. சுப்பிரமணி யன் சுவாமி தற்போது பாரதீய ஜனதா கட்சியின் உறுப்பினராக இருக்கின்றார். பா.ஜ.கவின் தலைவர்களில் ஒருவர் என்று அவரை குறிப்பிட்டால் கூட பரவாயில்லை. அவரை ஊடகங்கள்- குறிப்பாக இந்திய ஊடகங்கள் கூட பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவர் என்றே குறிப்பிடுகின்றன. உண்மையில் அவர் ஜனதா கட்சியின் தலைவர். அவர் ஒரு மூத்த அரசியல்வாதி என்பதையும் மறுப்பதற்கில்லை. அத்துடன் அவர் ஒரு பொருளியலாளர். 1991 காலகட்டத்தில் இந்திய மத்திய அரசில் சட்டத்துறை அமைச்சராக இருந்தவர்.

ஆனால், அதிரடியாகவும் அடிக்கடி குளறுபடியாகவும் கருத்துக்களை வெளியிட்டு சர்ச்சைகளை ஏற்படுத்தும் ஒரு மனிதர் இவர். சிக்கலான பிரச்சினைகளை இராஜதந்திர ரீதியாக கையாள வேண்டிய அவசியம் இருக்கின்றபோது இவ்வாறானவர்களை அதற்கு பயன்படுத்த எண்ணினால் அது சிக்கல்களை மேலும் அதிகமாக்கவே வழிவகுக்கும். இந்நிலையில்தான், இலங்கையில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொள்ள இந்தியப் பிரதி நிதியாக அவர் இலங்கை விஜயம் செய்தார். பல அரசியல் கருத்துக்களை வெளியிட்டார். அக்கருத்துக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு இனிப்பானதாகவும் தமிழர்களுக்கு கசப்பும் சலிப்பும் அளிப்பதாகவும் அமைந்தன. இவ்வாறானதொரு மனிதரை மோடி அரசாங்கம் எவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதித்தது என்பது இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி. இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை காண்பது குறித்து இந்தியாவிற்கு பாரிய பொறுப்புள்ளது. தற்போது எழுந்துள்ள மீனவர் பிரச்சினையை கையாள வேண்டிய அவசியமிருக்கின்றது. இந்நிலையில் இலங்கையில் நடை-பெற்ற பாதுகாப்பு கருத்தரங்கிற்கு சுப்பிமணியம் சுவாமியை யார் அனுப்பியது? என்கிற கேள்வியை இந்திய அரசியல்வாதிகளும் கேட்டுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரை சந்திக்க வேண்டும் என்றால் இலங்கை ஜனாதிபதியின் அனுமதியைப் பெறவேண்டும் என்றெல்லாம் சுப்பிரமணியம் சுவாமி இலங்கையில் வைத்து கருத்துக்களை வெளியிட்டார். மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிமுறையொன்றையும் அவர் இலங்கை அரசாங்கத்திடம் முன்வைத்தார். அதனை இலங்கை அரசு நிராகரித்து விட்டது. இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட மூன்று வருடங்களுக்கு இலங்கை அரசு அனுமதி தரவேண்டும் என அவர் தெரிவித்திருந்தார். இலங்கையின் மீன் பிடித்துறை அமைச்சர் அந்த யோசனையை முற்றுமுழுதாக நிராகரித்து விட்டார். சுப்ரமணியன் சுவாமி என்ற ஒரு கோமாளியை இங்கே அழைத்து வந்து, அவரை இந்திய அரசின் பிரதிநிதி என்று, அப்பாவி சிங்கள மக்கள் மத்தியில் உருவகப்படுத்திக் காட்ட, இலங்கை அரசாங்கம் முயல்கிறது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியிருந்ததையும் இங்கு குறிப்பிடலாம்.

இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக இந்தியா பாடுபடும் என்று மோடி உறுதியளித்தார் என்றே அதனை மொழிபெயர்த்து செய்தி வெளியிட்டிருந்தன. இலங்கைத் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறுவதை இந்திய அரசுத் தலைவர்கள் தவிர்த்தே வருகின்றனர் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மீது இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் எனவும் கூட்டமைப்பினர் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு இந்தியா வேறு வார்த்தைகளில் பதிலளிக்க முடியாது. எனவே, அதற்கு இந்திய அரசு, இலங்கையுடன் அதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என



இந்த ஒரு சூழ்நிலையில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவிற்கு சென்று பிரதமர் மோடியை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். மோடியுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் சகல விடயங்களையும் விரிவாக எடுத்துரைத்ததாக இரா. சம்பந்தன் வெளியிட்டுள்ள கருத்துக் களிலிருந்து தெரிந்துகொள்ள முடிகின்றது. தமிழர் பிரதேசங்களின் அதிகரித்துக் காணப்படும் இராணுவப் பிரசன்னம், காணிகள் சுவீகரிக்கப்படுகின்றமை, வட மாகாணசபைக்கு அதிகாரங்கள் வழங்கப்படாமை, 13ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் பேசப்பட்டன. இவற்றை உள்வாங்கிக் கொண்ட பிரதமர் மோடி இராஜதந்திர வார்த்தைகளில் அவரது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இலங்கையில் வாழும் தமிழர்கள் சமத்துவம், கண்ணியம், நீதி மற்றும், சுயமரியாதையுடன் (equality, dignity, justice and self-respect) வாழ்வதற்கான தீர்வு குறித்து இந்தியா அக்கறை கொள்ளும் என்று அவர் தெரிவித்தார். சுயநிர்ணய உரிமை (The right to self-determination) என்ற பதத்தை அவர் பயன்படுத்தவே இல்லை. ஆனால், பல தமிழ் ஊடகங்கள் தெரிவித்துள்ளது. இவ்வகையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயமானது நரேந்திர மோடியின் தலைமையிலான இந்திய அரசாங்கத்திடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை விளக்கியுள்ளதோடு சில வேண்டுகோள்களையும் விடுத்திருக்கின்றது. அவ்வளவுதான்!

இந்தியப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு கருத்து வெளியிட்டுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 13ஆம் திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த விரும்பாது, அவ்வாறான ஆர்வம் இலங்கை அரசாங்கத்திற்கு இல்லை என்று இந்திய ஊடகங்களிடம் கூறியிருக்கின்றார். இந்நிலையில், தமிழர் தரப்பினர் இன்று இந்தியாவிடம் மட்டுமல்ல ஏனைய சர்வதேச நாடுகளிடமும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சென்று விளக்கும் பணியினை மட்டுமே மேற்கொள்ள முடியும். இலங்கை அரசோ யாருடைய கருத்தையும், ஆலோசனைகளையும் ஏற்று நடக்கத் தயாராக இல்லை. அது, அதன் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே காய்களை நகர்த்தும். இதனை தமிழ் மக்கள் இச்சந்தர்ப்பத்தில் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# எனக்கு தியானம் வருமா?

ஐயோ என்னால ஒரு நிமிஷம் கூட கண்ண மூட முடியலயே, என் மனம் என் கட்டுப்பாட்டுலேயே இல்லை, எனக்கு போய் தியானம் வருமா? இதுபோன்ற கேள்விகள் இல்லாமல் தியானம் கற்றுக்கொள்ள வந்தவர்கள் வெகு குறைவு. ஆனால் அனைவருக்கும் தியானம் சாத்தியமே என்கிறார் சத்குரு. பதில் உள்ளே...

தியானம் என்றால் ஆசையற்ற நிலையா, எண்ணங்கள் அற்ற நிலையா?

சத்குரு: கண்களை மூடிக் கொண்டு அமர்வதை தியானம் என்கிறார்கள். கண்களை மூடிக் கொண்டு நீங்கள் பல விடயங்களைச் செய்ய முடியும். சிலவற்றின் மீது கவனத்தைக் குவிக்க முடியும், ஒரு மந்திரத்தை தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருக்க முடியும். இப்படி பல விடயங்கள் உள்ளன.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

'நீங்கள்' என்பது என்ன? தற்போதைய நிலையில் உங்களுக்கு உடல் இருக்கிறது, எண்ண ஓட்டங்கள் உள்ளன, உணர்ச்சிகள் உள்ளன. இந்த மூன்று அடிப்படைத் தன்மைகளைத் தான் 'நான்' என்று சொல்லிக் கொள்கிறீர்கள், இல்லையா?

இந்த உடலை நீங்கள் எங்கிருந்து பெற்றீர்கள்? நீங்கள் பிறக்கும் போது இவ்வளவு சிறிதாக இருந்தீர்கள். இப்போது இவ்வளவு பெரிதாய் வளர்ந்திருக்கிறீர்கள். எப்படி? சாப்பாட்டின் மூலமாகத்தான், இல்லையா? எனவே உடல் என்பது ஒரு சாப்பாட்டுக் குவியல்தான். நீங்கள் சாப்பிட்ட சாப்பாடு தான் இங்கே ஒருவித உடலாக அமர்ந்திருக்கிறது. மனம் என்று எதைச் சொல்லுகிறீர்கள்?

மனம் என்பது நீங்கள் பார்த்த, கேட்ட, நுகர்ந்த, சுவைத்த, தொட்டதன் மூலமாக பதிந்த பதிவுகளின் குவியல்தான். ஐம்புலன்களின் மூலமாக சேர்ந்தவற்றை மனம் என்கிறீர்கள். எனவே 'மனம்' என்று நீங்கள் சொல்வதும் உண்மையில் உங்கள் மனமல்ல. இவை வெளியிலிருந்து சேகரமாகும் பதிவுகள் தான். உங்கள் உணர்ச்சியென்பது நீங்கள் தலையில் சேகரித்து வைத்துள்ளவற்றின் உங்கள் வெளிப்பாடுதான்.

எனவே தியானம் என்பதன் நோக்கம் எது நீங்கள் இல்லையோ அவற்றிலிருந்து உங்களை தனியே பிரித்தெடுப்பதுதான். இந்த உடல் என்பது உணவின் குவியல், இது நீங்கள் அல்ல. எனவே தியானத்தில் அமர்ந்திருக்கும் போது, நான் உடல் அல்ல என்பதைத் தெளிவாக உணர்கிறீர்கள். மனம் என்பதும் வெளியிலிருந்து சேர்ந்த பதிவுகளின் குவியல் தான்.

எந்தவிதமான சூழ்நிலையில் நீங்கள் இருக்கிறீர்களோ உங்கள் குடும்பம், பெற்றோர், சென்று வந்த பள்ளி, செய்யும் வேலை என்பவற்றைப் பொறுத்தே உங்கள் மனம் இருக்கிறது. இது உங்கள் மனமல்ல. இது நீங்கள் சமூகச்சூழலின் மூலம் சேகரித்த ஒன்று. எனவே நீங்கள் மனமல்ல என்ற தெளிவான இடைவெளியைக் காண்கிறீர்கள்.

எந்த ஒரு பாதிப்பும் உங்களுக்குள் உடலின் மூலமாகவோ மனதின் மூலமாகவோ தான் வருகிறது. பலவிதமான துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். மனிதர்கள் தாங்களாகவே எல்லாவிதமான துன்பங்களையும் கண்டுபிடித்து விட்டார்கள். ஆனால் எல்லாத் துன்பங்களையும் உடலின் மூலமாகவோ அல்லது மனதின் மூலமாகவோ தான் மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். நீங்கள் கண்மூடி தியானத்தில் அமர்ந்திருக்கும் போது நான் உடலல்ல, நான் மனமல்ல என்று தெளிவாக உணர்ந்தால் துன்பம் உங்களைத் தொடமுடியுமா? இதுதான் துன்பங்களுக்கு எல்லாம் முடிவு.

வெளியிலிருந்து சேகரித்த உடல், மனம் இவற்றுக்கும் உங்களுக்கும் இடையில் தெளிவான இடைவெளியை உணர்ந்து நீங்கள் தியானத்தன்மையில் இருந்தால், அவை இரண்டையும் எப்படி உபயோகப்படுத்துவது என்பதைக் கற்றுக் கொள்வீர்கள், அவ்வளவுதான். ஆனால் அதுவே நீங்களல்ல. உங்கள் அனுபவத்தில் இந்த இரண்டோடும் அடையாளம் கொள்ளாமல் இருந்தால், துன்பம் என்பதே இருக்காது. இது ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியம். ஒருவர் விருப்பத்தோடு இருந்தால் நிச்சயம் இது சாத்தியம்.

இந்த சூழ்நிலையை நமக்குள் எப்படி உருவாக்குவது என்பதற்கு ஒரு முழு விஞ்ஞானமே உள்ளது. எனவே இதை நாம் எல்லாவகையான மக்களுக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். குற்றவாளிகள், கிராம மக்கள், படிக்காதவர்கள், மெத்தப் படித்தவர்கள், தொழில்துறைத் தலைவர்கள் என பலருக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

வெளிச்சூழ்நிலை என்று வரும்போது நமது திறமை என்பது வித்தியாசப்படுகிறது. நான் செய்வதை நீங்கள் செய்ய முடியாது. நீங்கள் செய்வதை நான் செய்ய முடியாது. வெளிச்சூழல் திறன் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுகிறது. ஆனால் உள்நிலையைப் பொறுத்தவரை, எல்லோரும் ஒரே விதமான திறனுடன் இருக்கிறோம். நீங்கள் அதை பயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்களா, இல்லையா என்பது உங்களைப் பொறுத்தது.

தியானம் எனும்போது எல்லோருக்கும் சமமான வாய்ப்பு உள்ளது. ஒருவர் அதற்கான விருப்பம் கொண்டிருக்க வேண்டும். அவ்வளவுதான். துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ யாருக்குத்தான் விருப்பம் இருக்காது? யார் அதை வேண்டாமென சொல்லப் போகிறார்கள்? எல்லோருக்கும் அதுதான் தேவை. ஆனால் பலருக்கும் இதைப்பற்றி தெரியவில்லை என்பதுதான் விடயம்.

எனவே நமது வேலை, தியானம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவது தான். இது ஏதோ மலைக் குகைகளுக்கு செல்வதைப் பற்றியல்ல. இமயமலைக்குச் சென்று அமர்வதைப் பற்றியல்ல இது, துன்பங்களில் இருந்து முற்றிலுமாய் விடுபட்டு வாழக் கற்றுக்கொள்வது. நீங்கள் விரும்பும் விதமாக வாழ்வோடு விளையாட முடியும். ஆனால் வாழ்க்கை உங்கள் மீது ஒரு சிறு தழும்பைக் கூட ஏற்படுத்தாது.

தற்போது வாழ்வின் போக்கில் மக்கள் காயம்பட்டுக் கிடக்கிறார்கள். அப்படி என்னதான் செய்துவிட்டார்கள்? தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றவும், ஒரு நாள் இறந்து போகவும் எவ்வளவு வலியையும் வேதனையையும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்? ஏனென்றால், இன்னமும் உயிர்த்தன்மையோடு எப்படி தொடர்பு கொள்வது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.



சத்குரு வாசுதேவ்

ஒரு மனிதன் தியானநிலையில் இருந்தால் அந்த மனிதனுக்கு துன்பம் என்பதே இருக்காது. தியானநிலை என்றால் துன்பத்திலிருந்து முற்றிலும் விடுபட்ட நிலை. வாழ்க்கையின் போக்குகள் அவரைத் தொடாமல் அவரது வாழ்வில் அவர் விரும்பியதைச் செய்யலாம்.

## கேள்வியாளர்: தியானத்தின் பலன்கள் என்ன?

சத்குரு: பொதுவாக ஒவ்வொரு மனிதரும் விரும்புவது ஆரோக்கியத்தையும் அமைதியையும் சந்தோஷத்தையும்தான். ஆரோக்கியம் என்பதை நிச்சயமாக உருவாக்கிக் கொள்ளமுடியும். தியானம் என்ற தன்மை நமக்குள் வந்துவிட்டால், அமைதியும் சந்தோஷமும் இயல்பானவை ஆகிவிடும்.

தியானம் என்பது செயல் அல்ல, அது ஒரு நிலை. வாழ்க்கையே தியானநிலையில் இருக்கவேண்டும் என்பதுதான் நம் நோக்கம். ஏதோ பத்து நிமிடங்களுக்கு கண்ணை மூடி அமர்வதைப் பற்றி நாம் பேசவில்லை. எதைச் செய்தாலும் தியான நிலையில் செய்வதைப் பற்றி பேசுகிறோம். இந்தத் தன்மையையே நமது வாழ்வில் கொண்டுவர விரும்புகிறோம். அப்படி நடந்தால் ஆரோக்கியமாக இருப்பது, அமைதியாக இருப்பது, ஆனந்தமாய் இருப்பது என்பதெல்லாம் முயற்சியின்றி நடக்கும்.

தியானத்தின் தன்மை அப்படிப்பட்டது. ஒரு மனிதன் இப்படி இருந்தால் அவனது உடல், மன செயல்பாடுகள் ஒருமுகப்பட்டும் கூர்மையுடனும் இருக்கும். ஒரு மனிதர் அமைதியாகவும், ஆனந்தமாகவும் இருக்கும் போது மட்டுமே அவரது புத்திசாலித்தனம் சிறந்த முறையில் செயல்படும்.





Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது!



- லைன் ஒப் கிரெடிட் எடுக்க,
- குறைந்த வீதத்தில் மோட்கேஜ் பெற்றுக்கொள்ள,
- ரீபைனான்ஸ் செய்ய,
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க,
- பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ் எடுக்க,
- பவர் ஒப் சேல் நிலைமை தவிர்க்க,
- கடன்களை ஒன்றுபடுத்த

அத்துடன் உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள்.

எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000 * மட்டுமே!

WIN UP TO **$100,000***

Everyone Who Funds A Mortgage With US Ask How !

*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

2 Yrs Fixed Rate : 2.34%

5 Yrs Fixed Rate : 2.89 %

5 Yrs Variable : Prime - .60% (2.4 %)

*OAC

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00 மணி வரை**

MORTGAGE ALLIANCE Lic # 10530

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

#1 Brokerage in Toronto*

Corporate Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232



எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001426
**Cell : 416-624-4843**

*Listing commission does not include buyer brokerage commission of 2.5%

# போரில் உடைந்த மனங்களை மீளமைத்தல்!

## தாயக மடல்

- ஆதித்தன் -

போரின் பின்னரான இக்காலகட்டத்தில், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்கின்ற அதேவேளையில், போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியது முக்கியமான தாகும். அதில் மிக முக்கியமானது, அம்மக்களது உளநிலை தொடர்பான ஆய்வாகும். போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்ட பின்னும், பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் இதற்கான ஆய்வுகள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

யுத்தத்தின் பின்னர் அதிகளவிலான மக்கள் உளநிலை பாதிக்கப்பட்டவர்களாக காணப் படுகின்றனர். பாதிப்பின் அளவுகள் வெவ்வேறானதாக இருக்கலாம். ஆனால், பாதிப்புக்கள் பெருமளவானோரிடம் காணப்படுகின்றன. அவர்கள் அதிகளவு பாதிப்பிற்குள்ளாகி மருத்துவமனையை நாடுகின்ற போதே அவர்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அண்மையில், தற்கொலைகள் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக உளவியல் துறை பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்துள்ள தகவல்களும் கருத்துக் களும் இங்கு கவனத்திற்குரியவை. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வடக்கில் தற்கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அவர் தெரிவித்திருக் கின்றார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள, சமூக ரீதியான புனர்வாழ்வும் பொருத்தமான பொருளாதார புனர்வாழ்வும் அவசியம் என அவர் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, யுத்த காலத்திலும் பார்க்க யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தற் கொலைகளின் வீதம் அதிகரித்திருப்பதாக வும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததை யடுத்து, படிப்படியாக தற்கொலை வீதம் அதிகரித்து கடந்த ஆண்டில் அது 28 வீதத்தை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். போர்க் காலங்களில் நெருக்கடிகளையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்கியுள்ள மக்கள் தங்களுக்குள் இணைந்திருப்பார்கள். அந்தச் சூழல் தற்கொலை எண்ணத்தைத் தூண்டுவதற்குத் தடையாக இருக்கும். இதனால் போர்க் காலங்களில் தற்கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்திருந்தது எனவும் அவர் குறிப்பிடுகின்றார். அவர் கூறுகின்ற கருத்து முற்றிலும் சரியானதே. போரின் போதும், போர் முடிவடைந்ததன் பின்னரும் போர் நடைபெற்ற பிரதேசத்தில் வாழ்கின்றவன் என்கிற வகையில் அவரின் இக்கருத்து முற்றிலும் சரியானதென்றே கூறுவேன். போர்க்காலங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் மக்கள் முகம் கொடுத்த போதிலும், தற் கொலைகள் மிக அரிதாகவே இடம்பெற்றன.



இது ஒருபுறமிருக்க, இன்று போரினால் உறவுகளை இழந்தவர்கள் மற்றும் காணாமல்போன தங்களது உறவுகளை தேடிக்கொண்டிருப்பவர்கள் பெருமளவில் உளப் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக, போரில் இடம்பெற்ற கடுமையான எறிகணை வீச்சுக்களினால் தங்கள் பிள்ளை களை கண்முன்னே இழந்த பெற்றோரின் மனநிலை பாரிய பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. அப்பாதிப்புக்கள் போரின் பின்னரே வெளிப்படத் தொடங்கியுள்ளன. போரின் இறுதிக்கட்டத்தில் வெளியேறி, பின்னர் வெவ்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் இருந்துவிட்டு, மீள்குடியேற்றத் தின் பின்னரே ஊரில், கிராமத்தில் ஒன்றாக வாழ்ந்தவர்களை சந்திக்க முடிகின்றது. அவ்வேளைகளில் எப்படி இருக்கின்றீர்கள் குடும்பத்தில் யாருக்கும் பிரச்சினை இல்லைத்தானே என்று சம்பிரதாயத்திற்கா வது கேட்க வேண்டியுள்ளது. அவ்வாறு கேட்கும்பொழுது பாதிக்கப்பட்டவர்களின் உளக்குமுறல்கள் வெளிவருவதை அவதானிக்க முடிகின்றது. போரின் போது ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து செல்கையிலேயே பலர் தங்கள் உறவுகளை இழந்து கொண்டே இடம்பெயர்ந்ததை காண முடிந்தது. மீதமிருப்பவர்களை பாதுகாக்கும் நோக்கில் மனங்களில் கனக்கும் துயரங்களு டன் அவர்கள் மேலும் மேலும் இடம் பெயர்ந்தனர். இறுதிக்கட்டத்தில் அவ்வாறு சென்றவர்களில் பலர் பலியாகவும் நேரிட்டது.

இவ்வாறாக உறவுகளை பறிகொடுத்து விட்டு தப்பி வந்து தற்போது தங்கள் ஊர்களில் வெறும் நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலரை சந்திக்க முடிகின்றது. இவ்வாறான பலர் தற்கொலை செய்து கொண்டனர். பலர் இன்னமும் தற்கொலை எண்ணங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களை அடையா-ளம் கண்டு ஆய்வுகளுக்குட்படுத்தி அவர்களுக்கான உளவளத்துணை மற்றும் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை மிக முக்கியமானது. இவர்களது உளப்பாதிப்பின் விளைவுகள் அவர்களது சந்ததியினரையும் பாதிக்கும் நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்பட்ட இழப்புக்களை நினைத்து நாளாந்தம் ஒரு தாய் அழுது கொண்டிருக்கும் போது அது பிள்ளையை யும் பாதிக்கின்றது. பாடசாலையில் அந்தப் பிள்ளை படிப்பிலும் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது. எனவே இந்த நிலைமைகள் ஒரு தொடர் பாதிப்பிற்கே இட்டுச்செல்லும். போரின் பின்னால் வீதிகள், வீடமைப்பு போன்ற சில அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால், மக்களின் உளநலப்பாதிப்புக்கள் குறித்து எவரும் பெரி யளவில் முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை.

மக்களின் இந்த உளப்பாதிப்புக்களை ஆய்ந்தறிந்து அதற்கான பரிகாரத்தை மேற்கொள்வதென்பது அரசாங்கத்தினால் மேற்கொள்ள வேண்டிய விடயம் அல்ல. இன, சமூக அக்கறையுள்ளவர்களே அதனை மேற்கொள்ள முடியும். இது குறித்து தமிழ் அரசியல்வாதிகளும் சிந்திக்க வேண்டும். வட மகாணசபை நிர்வாகமும் சிந்திக்க வேண்டும். வடமாகாணசபை உறுப்பினர் களாக மருத்துவர்களும் தெரிவாகியுள்ளனர். வட மாகாணத்திற்கான சுகாதார அமைச்சும் உள்ளது. இதற்கான வேலைத்திட்டம் ஒன்றை பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பரவலாக மேற்கொள்ள வேண்டும். போருக்குப் பின்னர் கலாசார ரீதியாகவும், சமய ரீதியாகவும் மக்கள் ஒன்றிணைவது, தற்கொலைச் சம்பவங்களைக் குறைப்பதற்கு ஓர் உந்து சக்தியாக அமைகின்றது. எனவே, அந்தச் செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டும் என்று பேராசிரியர் சோமசுந்தரம் குறிப்பிடுகின்றார். எனவே, இவ்வாறான செயற்பாடுகளை ஊர்கள், கிராமங்கள் தோறும் ஏற்படுத்தும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகள் இவற்றில் முக்கியமானதாகும்.

இவற்றினோடு மக்களது உளநிலைப் பாதிப்புக்களின் அளவுகளை ஆராய்ந்து அவற்றிற்கேற்ப சிகிச்சை முறைகளையும், உளவளத்தை மேம்படுத்தும் வேறு வழிமுறைகளையும் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கட்டடங்களை அமைப்பதை விடவும் உடைந்து போன மனங்களை மீளக் கட்டியெழுப்பும் பணி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவற்றை உடனடியாக மேற்கொள்வதற்கான பொறிமுறை ஒன்றை அமைத்து சம்பந்தப்பட்டவர்கள் இப்போழுதே அதனை ஆரம்பிக்க வேண்டும். இது ஒரு குழுச் செயற்பாடாக அமையும் போது அதனை விரைவாகவும், நேர்த்தியாகவும் செய்ய முடியும்.


விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com



விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



SPACE AVAIL. FOR DENTAL OFFICE
1000 - 1800 Sq.ft available for dental office in GTA Square mall - **Middlefield & Finch.**
Dedicated underground parking & locker included.
**Pl. call: 416.315.9397**

# ஆதன முதலீடு சிறந்ததா?

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 422

மேற்கத்தைய நாடுகளில் புள்ளி விபர மதிப்பீடு என்பது வாழ்வில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. உதாரணமாக தேர்தலாக இருக்கட்டும், ஆட்சியில் இருக்கும் அரசு புதிய சட்டத்தை கொண்டு வர விரும்புவதாக இருக்கட்டும் முதலில் மக்களிடம் ஒரு மதிப்பீடு எடுக்கப்படும். இதிலிருந்து பல முடிவுகள் எடுக்கப்படும். இந்த விதமான புள்ளி மதிப்பீடு எவ்வளவு தூரம் நம்பிக்கையானது என்பது ஒரு கேள்விக்குறியாக இருந்தாலும், நியாயமானதும் நேர்மையானதுமான புள்ளி விபரங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இதனை நாம் மறக்க முடியாது. கனடாவின் கிழக்கு கரையிலிருந்து மேற்கு வரையான ஆதனம் சம்பந்தமான புள்ளி விபரம் அண்மையில் (ஜுலை, ஓகஸ்ட் 2014) எடுக்கப்பட்டது. இவர்களின் முடிவிலிருந்து 2008 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையான தமது முதலீடுகளில் ஆதனம் சம்பந்தமான முதலீடே நம்பிக்கைக்குரியதாக உள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

கனடாவின் முக்கிய நகரங்களில் முன்னணியிலிருக்கும் ரொறொன்ரோவை எடுத்தால், யூலை 2014 இல் சராசரி வீட்டுவிலை $550,700 ஆகக் காணப்பட்டது. 1996 யூலையில் இதே சராசரி விலை (18 வருடங்களிற்கு முன்பாக) $196,856 ஆகக் காணப்பட்டது. சராசரி அதிகரிப்பு 175% ஆகும். இந்த அதிகரிப்பு 100% சரியானதாகக் கொள்ள முடியாது. இந்தக் கால கட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ரொறொன்ரோவின் Toronto Real Estate Board இன் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமைக்கப்பட்ட வீடுகள், மனைகளின் அளவுகள், மாற்றங்கள் பலவிதமாக மாறிவிட்டன. ஆனால் இதனை ஒரு அளவு கோலாகக் கொள்வதில் தவறு இருப்பதாக தெரியவில்லை.

இத்துடன் 1966 ஆம் ஆண்டு கணக்கை மேலும் ஒப்பிட்டுப் பார்த்தால் (48 வருடங்களிற்கு முன்பாக) சராசரி ரொறொன்ரோவின் வீட்டின் விலை $22,500 ஆக மட்டுமே காணப்பட்டது.

எதிர்வரும் 5, 10 , 15, 20 வருடங்களில் ரொறொன்ரோவின் வீட்டுவிலை எவ்வாறு இருக்கலாம்? ஆதனம் நிர்மாணம் செய்யக்கூடிய நிலத்தின் அளவு மிகவும் வேகமாக சுருங்கி வருவதனைக் காணலாம். இதனாலேயே அடுக்குமாடி மனைகளைக் கட்ட வேண்டிய நிலைமைக்கு நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் தள்ளப்படுகின்றது. எமது பெரும்பாகத்தின் பெரும்பகுதியில் இருக்கும் நிலம் எவ்வளவு காலத்திற்கு போதுமானதாகலாம்?



Toronto Real Estate Board இல் 1936 ஆம் ஆண்டுத் தலைவரின் அன்றைய கருத்தின்படி, சராசரி வீட்டு விலை ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏறக்குறைய $10,000 ஆகக் காணப்பட்டது. (வட ரொறொன்ரோ)

இதே குறிப்பிட்ட பகுதியில் இன்றைய சராசரி வீட்டு விலை 1 மில்லியனை தாண்டியுள்ளது. ஆனால் அன்று தொடக்கம் இன்றுவரை ஆதனவிலை தொடர்ந்து அதிகரித்துத்தான் வருகின்றது என்றால், பதில் - இல்லை என்பதே? வீட்டின் விலையில் ஏற்றமும் இறக்கமும் மாறி மாறித்தான் வருகின்றது என்பதனைக் கணக்கில் கொள்ள வேண்டும். ஆனால் தொடர்ச்சியாக, நீண்ட கால நோக்கில் ஆதனத்தின் விலை எவ்வாறு காணப்பட்டது, காணப்படுகின்றது அல்லது காணப்படலாம் என்பதனையே நாம் கணக்கில் கொள்ள வேண்டும்?

அண்மையில் 'Ipsos Reid' என்ற நிறுவனம் ஒன்ராரியோ றியல் எஸ்டேட் அசோசியேசன்ஸ் (Ontario Real Estate Association) சார்பாக புள்ளிவிபர மதிப்பீடு ஒன்றை எடுத்தது. இதில் 82% மான ஒன்ராரியோ மக்கள் ஆதன முதலீடே சிறந்ததென தமது கருத்தை தெரிவித்துள்ளார்கள். ஆதனம் தான் நாம் வாழும் போதே பெறுமதியும் அதிகரிக்கின்றது, அத்துடன் ஒரு பகுதி சேமிப்பாகவும் மாறுகின்றது என்பதனை கவனிக்க வேண்டும்.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

*Raja Mahendran*, P.Eng.
*Broker / Owner*



**5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969**

**HOUSE FOR SALE**
**Brimley & Sheppard**




- Brand new (never 2 lived)
- 5 bedrooms house for sale.
- 5 washrooms.
- Custom built on 70' frontage over 3500 sq.ft.
- Stylish kitchen.
- Asking $1.5 Million.

**HOTEL FOR SALE** SOLD
* 78 Renovated rooms
* Brand Name
* Location: GTA
* Revenue: Over $1.5 Million
- Asking $6.5Million

**LAND FOR SALE WITH BUNGALOW HOUSE**
- 2 Houses can be built
- Ready to built
- Scarborough

**HOTEL FOR SALE**
* Brand Name Hotel
* 1 ½ hour from Mississauga
* 60 Rooms
* Resonable Rate
* Income over $1Million Income

*Asking price*
**$1.5 Million**

**COMMERCIAL UNITS FOR SALE** SOLD

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of Scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**DENTAL OFFICE**

1000 - 1800 Sq.ft available for dental office space available in GTA Square mall - ***(Middlefield & Finch)***. Dedicated underground parking & locker included.
***ONLY FOR DENTAL OFFICE***

**CONDO. FOR RENT**

***HWY 427 & Dundas***
Brand new TRIDEL Condo.
2 Bedrooms, 2 Washrooms.
swimming pool, Rec. room,
24 hrs. security, Vacant
***Asking $1400.00***

**BRAND NEW CONDO. FOR SALE**
- 1Bedroom Condo for sale.
- 1 Washroom
- Available January 2018.
- 2 Years rental Guranteed.
- ***No interim closing***

# கிரிக்கெட் வரலாற்றின் பிதாமகன் பிறந்த தினம்

## டான் பிராட்மேன் - ஒகஸ்ட் 27, 1908

டான் பிராட்மேன் தான் உலகின் தலை சிறந்த துடுப்பாட்டக்காரர் என்பது விஞ்ஞான பூர்வமாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது.
டொனால்ட் ஜார்ஜ் பிராட்மேன், ஆகஸ்ட் 27ம் திகதி 1908ம் ஆண்டு, நியூ சவுத் வேல்ஸ் இல் பிறந்தார். டான் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டார். சிறந்த துடுப்பாட்டக்காரரான இவர் அவுஸ் திரேலியா, நியூ சவுத் வேல்ஸ், தெற்கு அவுஸ்திரேலியா ஆகிய அணிகளில் விளையாடி உச்சம் தொட்டார்.

சாதனைகள்: டெஸ்ட்டில் 52 போட்டிகளில் விளையாடி 6,996 ஓட்டங்கள் எடுத்தார். 334 என அதிகபட்ச ஓட்டம் எடுத்து, யாரும் எட்டி யிராத 99.94 என்ற சராசரி ஓட்டவிகிதமும் பெற்றார். முதல் தரத்தில் 234 போட்டிகளில் விளையாடி 28,067 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் இவர் எடுத்த அதிகபட்ச ஓட்டம் 452, மற்றும் சராசரி 95.14 ஆகும். மொத்தமாக 146 முறை 100 ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார். 20 வருடம் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஈடுபட்டு பல்வேறு சாதனைகளை புரிந்த இவர் 1987ல் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காக நம்பிக்கை மையம் ஒன்றை நிறுவினார்.

சாதனை படைத்த களம்: சாதனை பயணத்தை தொடங்கிய பிராட் மேன்னுக்கு யூலை மாதம் 11ஆம் திகதி 1930ஆம் ஆண்டு கிரிக்கெட் வரலாறு ஒன்று நிகழ்ந்தது. அதாவது கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னனாக கருதப்படும் டான் பிராட்மேன் இங்கிலாந்து அணிக்கு எதிராக லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில், ஒரே நாளில் 309 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ஒரே நாளில் முச்சதம் எடுத்த ஒரே வீரர் டான் பிராட்மேன் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.



சின்னப்பையனாக யாரும் பயிற்சி தராமல் கிரிக்கெட் ஸ்டாம்ப்பை கொண்டு கோல்ப் பந்தை அடித்து விளையாடி பயிற்சி செய்தவர்தான் பிராட் மேன். அவர் ஆடிய காலத்தில் டெஸ்ட் போட்டிகள் மிகக் குறைவாகவே இருந்தன. இன்றைக்கு போல அவர் காலத்தில் கிரிக்கெட்டில் பெரிய வருமானம் கிடையாது. ஸ்ரொக் ப்ரோக்கராக வேலை பார்த்தார் பிராட் காலையில் ஏழு மணியில் இருந்து பத்து வரை அங்கே வேலை பார்த்துவிட்டு மைதானத்துக்கு வருவார். பின்பு இரவு ஏழு முதல் பத்து மணிவரை மீண்டும் அந்த வேலையை செய்வார். அப்பொழுது இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் மிகப்பெரிய சண்டைக் கோழிகள் என்று சொன்னால் சரியாக இருக்கும். அவுஸ்திரேலியா ஆஷிஸ் தொடரை வாழ்வா? சாவா? பிரச்சினையாக இருநாட்டவரும் கருதினார்கள். இவர் ஆடிய இருபதாண்டு காலத்தில் ஒரே ஒரு முறைதான் அவுஸ்திரேலியா ஆஷஸ் தொடரை இழந்தது என்பதே இவர் எத்தகைய ஆட்டத்திறன் கொண்டவர் என்பதை விளக்கும். இங்கிலாந்து ஜெயித்த ஒரு முறையும் பாடிலைன் என்கிற பந்துவீச்சு முறையை பின்பற்றியது. அதாவது எண்ணற்ற வீரர்களை லெக் சைடில் நிற்க வைத்து விக்கெட்டை கழற்றி விடுவார்கள். இது கிரிக்கெட்டின் ஆரோக்கியமான போக்கிற்கு எதிரானது என எதிர்ப்பும் எழுந்தது. அப்படிப்பட்ட தொடரில் கூட 56 என்கிற சராசரியை வைத்திருந்தார் பிராட்.

1931ல் நடந்த சாதனை: ஒரு உள்ளூர் போட்டியில் டான் பிராட்மேன் ஆட களம் புகுந்தார். அந்த போட்டியில் பிராட்மேன் இருபத்தி இரண்டு பந்துகளில் 100 ஓட்டங்களை கடந்து சாதனை படைத்தார்.

4 ஓட்டங்களுக்கான தேடல்: டெஸ்ட் போட்டிகளில் 99.94 என அதிகமான சராசரி பெற்றுள்ள இவரின் ஓட்டங்களில் மீதமுள்ள

### விளையாட்டுத் தகவல்கள் 354

4 ஓட்டங்களை அவர் எப்படி தொலைத்தார் என கேள்வி எழும்ப அதையும் கண்டுபிடிக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. டான் பிராட்மேன் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று 60 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது கணக்கில் விடுபட்ட அந்த 4 ஓட்டங்களை கண்டுபிடித்து விடலாம் என்று புள்ளியியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். பிராட்மேனின் டெஸ்ட் சராசரி 99.94. அவர் விளையாடிய கடைசி டெஸ்ட் போட்டியில் 4 ஓட்டங்களை எடுத்திருந்தால் அவரது சராசரி 100 ஆக உயர்ந்திருக்கும். ஆனால் அவர் அதிகம் அறியப்படாத இங்கிலாந்து பந்து வீச்சாளர் எரிக் ஹோலீஸ் என்பவரிடம் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். சார்லஸ் டேவிஸ் என்ற புள்ளியியல் நிபுணர், 20 ஆண்டுகால அவரது கிரிக்கெட் மற்றும் 197 மணி நேரங்களுக்கு மேலாக அவர் களத்தில் நின்றது என அவரது திறமை என்பதை வைத்து பார்க்கும்போது, அவர் காலத்தில் ஓட்டங்கள் குறிக்கப்பட்ட முறையை நாம் ஏன் உத்தரவாதமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். கணினி வழி பயன்பாடு இல்லாத காலகட்டத்தில் இவரது ஓட்டங்கள் மற்ற



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 15ஆம் பக்கம்




| TAX FREE MONEY | AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |


Brock Rd/ Dersan St.
$514,900
3 Bedrooms, 3 W Rooms
Gorgeous Home With 9 Foot Ceilings
On The Main Flr Open Concept Living Space
10th Line/Main St
$559,800
4 Bedrooms, 4 W Rooms
Great Rm W/Gas Fireplace
Dir Access To 2 Car Grge.
Thickson & Carnwith
$599,900
5 Bedrooms, 4 W Rooms
Rich Hardwood Stairs,Fireplace,
Cathedral Ceiling In Living Rm,
10th Line & Hoover Park
$609,900
4 Bedrooms, 3 W Rooms
Glass/Stone Mosaic Backsplash,
Stainless Steel Appliances
Williamson & Westney
$649,900
4 Bedrooms, 3 W Rooms
9Ft Ceilings,Upgraded Kitchen
Cabinets, Boasts Dark Hdwood Floor
Hwy 7/Concession 4
$3,250,000
4+4 Bedrooms, 9 W Rooms
An Unbelievably Serene Setting
Nestled On A Quiet Court Location
Bellamy/Lawrence
$439,000
3+1 Bedrooms, 2 W Rooms
Fully Renovated Home Featuring
Modern Open Concept Kitchen
Brimley/Denison
$539,000
3+1 Bedrooms, 4 W Rooms
Extra Large Main Floor Family Room.
Updated Kitchen, Furnace, A/C
Mccowan & Highglen
$589,000
3 Bedrooms, 3 W Rooms
Open Concept Kitchen, Granite
Countertop & Under Mount Sink
Finch Ave/Neilson Rd.
$591,000
3 Bedrooms, 3 W Rooms
Paradise Home In Convenient
Location, Backs On Green Ravine
Middlefield/ 14th Ave.
$599,000
3 Bedrooms, 3 W Rooms
Finished Basement, Big Backyard,
New Air Conditioner
Markham Rd/Denison
$699,900
4+2 Bedrooms, 4 W Rooms
Custom Made Kitchen On The
Main Flr.Hardwood Flooring On Main
14th Ave/ Middlefield
$725,000
4 Bedrooms, 4 W Rooms
Walk Out Basement. Lots
Of Potential, Extra Window Installed
9th Line/Buroak
$799,000
4 Bedrooms, 3 W Rooms
W/O To Interlocked Back Patio
Huge Landscaped Backyard
Mccowan/16th Ave
$829,000
4+1 Bedrooms, 3 W Rooms
Gourmet Kitchen W/Upgraded Cabinet,
Bright & Spacious Bedrooms
Sell your home
FASTER
and more MONEY
#1 RE/MAX
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Direct 416 - 276-1225
Your home sold in 30 days or we buy it
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
Email: esrinathan@yahoo.com
I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |




## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

## Get More $$$ For Your House By Calling Me!

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



**Lourdson Antonipillai**
(Sales Representative)

**Dir: 416.738.8824**
**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated

# காலத்தோடு வளரும் கணினிகள் - 52

அன்பான வாசகர்களே!

Tablet, iPhone போன்ற சிறிய அளவு கொண்ட கணினி வடிவங்களை அன்ரொய்ட்ஸ் (Androids - Mobile Computing Devices) என்று அழைப்போம். இவற்றிற்கான Application Software Packages இனைச் சுருக்கமாக Apps என்று அழைப்போம். இந்தக் காலத்தில் இத்தகைய சிறிய அளவு கொண்ட கணினிகளுக்காக நிறைய Apps வெளிவருகின்றன. இவற்றில் பல இலவசமாகவே கிடைக்கின்றன. இதில் அப்பிள் நிறுவனம் முன்னணியில் உள்ளது. இதற்கு அடுத்ததாக Samsung நிறுவனம் உள்ளது. எதிர்காலத்தில் Mobile Computing இல் பல விதமான முன்னேற்றங்கள் நிகழும் என நம்பலாம். அன்ரொய்ட்ஸ் என்றால் மனிதரைப்போல் செய்யக் கூடியது (Robots) என்று கருத்து. அன்ரொய்ட்ஸ் கணினிகளுக்கென விசேட மான இயக்க அமைப்பு மென்பொருள் உள்ளது. முதலாவது அன்ரொய்ட்ஸ் இயக்க அமைப்பு மென்பொருள் நவம்பர் 2007 இல் அன்ரொய்ட் பீற்றா (Android Beta) என்ற பெயரில் வெளிவந்தது. அப்பிள் நிறுவனத்தில் அண்ணளவாக 1.2 மில்லியன் Apps (அப்ஸ்) உள்ளதாகக் கூறப்படுகின்றது. எதிர்காலத்தில் மிகவும் சக்தி வாய்ந்த விதம் விதமான Mobile Computing Devices உருவாவதோடு புதிய புதிய Apps உம் உருவாகும் என எதிர்பார்க்கலாம்.

> விளம்பரம் பத்திரிகையில் "வெகுளாமை" என்ற தலைப்பில் என்னால் எழுதப்பட்ட தொடர்கட்டுரை நூலுருவில் வெளிவந்துள்ளது என்ற செய்தியை அறிந்திருப்பீர்கள். இந்த நூலினை வாங்கி வாசித்தவர்கள் பகிர்ந்து கொள்ளும் விமர்சனங்கள் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. உங்கள் கருத்துக்களையும் தெரியப்படுத்துங்கள். இந்த நூலின் பிரதியை வாங்கிக்கொள்ள விரும்புபவர்கள் விளம்பரத்தின் பணி-மனையில் வாங்கிக்கொள்ளலாம்.

கணினித்துறை மிகவும் விசாலமான துறையாக மாறி வருகின்றது. Business Analysis, System Analysis and Design, Networking, Software Engineering, Computer Architecture, Artificial Intelligence (Robotics), Software Development, Quality Control and Software Testing, Human Computer Interaction எனப் பல்வேறு கணினித் துறைகளும், துறைசார்ந்த தொழில் வகைகளும் இருப்பதைக்




காணலாம். Business Analyst, System Analyst, Computer Architect, Networking Engineer, Networking Technician, Programmer or Software Developer, Software Engineer, Quality Analyst & Software Tester போன்றவற்றைக் கணினித்துறையில் உள்ள சில தொழில் வகைகளாகப் பார்க்கலாம். கணினித் துறையில் உள்ள வேலைவாய்ப்பில் பெரும் சரிவு அமெரிக்காவில் நடைபெற்ற 'செப்ரெம்பர் 11' அழிவு காரணமாக ஏற்பட்டது என்பது உலகம் அறிந்த உண்மை. ஆனாலும் படிப்படியாக இந்த நிலை மாறி கணினித்துறை மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. கணினித்துறையில் வேலை செய்பவர்கள் தொடர்ச்சியாக கணினித்துறையின் வளர்ச்சிக்கேற்ப தமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. கணினித்துறையில் ஒரு வேலையைப் பெற்றுக் கொள்வதற்கு பரந்த ஆழமான அறிவைப் பெறவேண்டியுள்ளது. இது கணினித்துறையில் வேலை செய்ய விரும்புவர்களுக்குரிய மிகப்பெரிய சவாலாகக் காணப்படுகின்றது.

எம்மால் முடிந்தளவு எல்லா வாசகர்களுக்கும் பயன்தரும் வகையில் காலத்தோடு வளரும் கணினிகள் என்ற தலைப்பில் விளம்பரத்தின் 51 இதழ்களில் ஆராய்ந்து வந்திருக்கின் றோம். கணினித்துறையில் உள்ள எல்லா விடயத்தையும் பேசி முடித்து விட்டோம் என்ற நிலையில்லா விட்டாலும் கணினித்துறையில் எந்த அறிவும் இல்லாதவர்களும் இந்தக் கட்டுரை மூலமாக நிறைய விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியவாறு இந்தக் கட்டுரையில் பயணித்திருக்கின்றோம். இந்த இதழுடன் இந்தத் தொடர்கட்டுரையை நிறைவுக்குக் கொண்டு வருகின்றேன். கணினித்துறை தொடர்ந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கப்போகின்றது. தேவை யேற்படும் பொழுது கணினி சார்ந்த புதிய விடயங்களை இன்னுமொரு கட்டுரை மூலமாகக் கொண்டு வரும் வாய்ப்பு இருக்கலாம்.

இந்த நேரத்தில் இந்தத் தொடர்கட்டுரையை தமது பத்திரி-கயில் இடம்பெறச் செய்த விளம்பரம் நிறுவனத்தினர்க்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லா வாசகர்களுக்கும் எனது நன்றி.

தொடர்கட்டுரை பற்றிய தமது எண்ணக் கருத்துக்களை எனக்குத் தெரிவித்து என்னை ஊக்குவித்தவர்களுக்கும் எனது நன்றி. இந்தத் தொடர்கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களை இன்னும் தெரிவிக்கலாம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! அடுத்த இதழில் மீண்டும் எனது புதிய தொடர் கட்டுரையுடன் சந்திப்போம். நன்றி. வணக்கம். முற்றும்.

# அன்புடைமை - 1

விளம்பரம் பத்திரிகையில் 'நினைவாற்றல்', 'வெகுளாமை' ஆகிய தொடர்கட்டுரைகளை எழுதியபோது வாசகர்களாகிய நீங்கள் தந்த ஊக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த இரு தொடர் கட்டுரைகளும் நூலுருவிலும் வெளி வந்துள்ளன. 'நினைவாற்றல் நூல் தற்பொழுது கையிருப்பில் இல்லாததால் இரண்டாம் பதிப்பினைச் செய்ய வேண்டியுள்ளது. 'வெகுளாமை' நூலின் பிரதி களை விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். 'காலத்தோடு வளரும் கணினிகள்' என்ற தொடர்கட்டுரை விரைவில் நிறைவுக்கு வரவிருக்கின்றது. இதனையும் நூலுருவில் கொண்டு வருமாறு வாசகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இந்த நேரத்தில் எனது அடுத்த முயற்சியை எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆரம்பிக்கின்றேன்.

இந்த இதழில் இருந்து 'அன்புடைமை' என்ற தலைப்பில் ஒரு தொடர்கட்டுரையை ஆரம்பிக்கின்றேன். எனது முன்னைய கட்டுரைகளைப் போன்று இந்தத் தொடர் கட்டுரையும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகின்றேன். இந்தத் தொடர்கட்டுரையை விளம்பரம் பத்திரிகையில் இடம்பெறுவதற்கு வாய்ப்பளித்த விளம்பரம் நிறுவனத்தினர்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மனிதர்களாகிய நாங்கள் எங்கள் உள்ளத்தில் அன்பினைப் பெருக்கி, அள வற்ற அன்பினைப் பொழிந்து, அற்புதமாக வாழவேண்டும் என்ற விருப்பத்தோடு அன்பு பற்றி இந்தத் தொடர்கட்டுரையை எழுத விழைகின்றேன். திருவள்ளுவர் 'திருக்குறள்' என்ற அற்புதமான பொக்கிஷத்தில் அறத்துப்பாலில், இல்லறவியலில், அன்புடைமை என்ற அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களைத் தந்துள்ளார். திருவள்ளுவர் தந்த அன்புடைமை என்ற தலைப்பையே இந்தத் தொடர்கட்டுரைக்கும் தலைப்பாகக் கொண்டு அன்பு பற்றி ஆய்விடுவோம்.

திருவள்ளுவரின் 71வது குறளில் இருந்தே இந்தத் தொடர்கட்டுரையை ஆரம்பிப்போம்.

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்
ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'

இப்பொழுது இந்த குறளிற்கு பரிமேலழகர் தரும் விளக்கத்தைக் கவனிப்போம்.

"அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழ் உளதோ? தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பம் கண்டு அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்நின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும்." உள்ளத்தில் இருக்கும் அன்பை தாழ்ப்பாள் போட்டு அடைக்க முடியாது என்றும் நமக்கு அன்புடையாரது துன்பம் காணும்போது நாம் வடிக்கும் கண்ணீர் வாயிலாக வெளிப்பட்டு விடும் என்றும் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இல்லற வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு வாழுதல் மிகவும் அடிப்படையான விடயம். அன்பு பற்றித் தொடர்ந்து உரையாடுவோம்.

உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.
நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



# சர்ச்சை: நட்வர் சிங் புத்தகமும் இந்திய அரசியலும்!

சென்ற இதழ் தொடர்ச்சி…

**சோனியா பிரதமராவதைத் தடுத்த ராகுல்:** அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 'இந்தியா ஒளிர்கிறது' கோஷத்தை முன் வைத்து 2004ஆம் ஆண்டு மக்களவை தேர்தலைச் சந்தித்தது. ஆனால், அவர்க ளால் அந்த கோஷத்தை வாக்கு களாக மாற்ற முடியவில்லை. தே.ஜ.கூ. தோல்வியை தழுவியது. காங்கிரஸூம் தேசிய ஜனநாயக கூட்டணியில் இல்லாத கட்சிகளும் சேர்ந்து சோனியாவை தலைவராகக் கொண்டு உருவாக்கிய ஐக்கிய முற்போக்கு கூட்டணி வெற்றி பெற்றது. சோனியா இந்தியப் பிர-தமராக பதவியேற்கும் நிகழ்ச்சியை எதிர்பார்த்து நாடு முழுவதும் காத்திருந்தது.

ஆனால், அப்போது சோனியா வீட்டுக்குள் அதற்கு எதிரான குரல் ஓங்கி ஒலித்தது. தனது பாட்டி இந்திரா காந்தி, தந்தை ராஜீவ் காந்தி இருவரையும் போல் அம்மாவும் உயிரை இழக்க நேரலாம் என்று ராகுல் அஞ்சினார். எனவே, தனது தாய் பிரதம ராவதை அவர் முழுமூச்சுடன் எதிர்த்தார். தனது அம்மா பிரதமராவதை தடுக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடத் தயாராக இருப்பதாக ராகுல் உறுதிபட கூறிவிட்டதால் எல்லாம் உச்சத்தைத் தொட்டன. ராகுல் மிகவும் உறுதியானவர். அவரது எச்சரிக்கை சாதாரணமானதும் அல்ல. சோனியா முடிவெடுக்க ராகுல் 24 மணி நேரம் அவகாசம் கொடுத்தார். அப்போது மன்மோகன் சிங், சுமன் துபே, பிரியங்கா மற்றும் நான் ஆகியோர் மட்டும்தான் அங்கே இருந்தோம். சோனியா மிகவும் சோகமாக காணப்பட்டார். அவர் கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது. ஒரு தாய் என்ற முறையில் அவரால் ராகுலை நிராகரிக்க முடியவில்லை. அதன்பிறகு என்னுடன் பேசிய சோனியா, மன்மோகனுக்கு பிரதமர் பதவியை அளிக்க விரும்புவதாக கூறினார். அடுத்த கூட்டம்… மன்மோகன் சிங், பிரணாப் முகர்ஜி, அர்ஜுன் சிங், சிவ்ராஜ்பாட்டீல், குலாம் நபி ஆசாத், பொடேதார் மற்றும் நான் இருந்தோம். மன்மோகன் மற்றும் என்னைத் தவிர யாருக்கும் கூட்டம் எதற்காக என்று தெரியாது. மன்மோகன் சிங்கை பிரதமராக வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக சோனியா அமைதியாக அறிவித்தார். 'மேடம் அதற்கான தீர்ப்பு எனக்கு இல்லை' என்று மன்மோகன் கூறினார். ஆனால், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு தலைமை ஏற்பதைத் தவிர மன்மோகனுக்கு வேறு வழியில்லை. மன்மோகனை சோனியா தேர்வு செய்தது மூத்த தலைவர்களுக்குப் பிடிக்க வில்லை. காங்கிரஸ் காரிய கமிட்டியில் அவர்கள் மூத்தவர்கள் என்பதோடு இதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்படாததும் அவர்களை வருத்தமடையச் செய்தது.

ஒருமுறை சோனியாவிடம், 'வரலாற்றில் மகுடத்தை மறுத்த இருவருமே இத்தாலியர்கள்' என்று விளையாட்டாக கூறினேன். 'இன்னொருவர் யார்' என்று கேட்டார். 'ஜீலியஸ் சீசர்' என்றேன்.

**இலங்கை விவகாரம்:** 1987 ஜூலை 25… இலங்கையின் இனக் கலவரத்துக்குள் இந்தியா கடுமையான வேகத்தில் இழுக்கப் பட்டது. இந்தியா - இலங்கை ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. 7 ரேஸ் கோர்ஸ் சாலையில் நடந்த அந்த கூட்டத்தில் நான் கலந்துகொள்ளப் பணிக்கப்பட்டேன். ஒப்பந்தம் கொழும்பில் ஜூலை 26 அன்று கையெழுத்தாக வேண்டும் என்று இந்தியா விரும்பியது. ஆனால், கொழும்பு அந்தத் தேதி மிக சீக்கிரமென்று கருதியது. இலங்கை அதனை ஜூலை 29க்கு தள்ளிப்போட வேண்டும் என்று விரும்பினார் கள். அப்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அசோகா ஹோட்டலில் தங்கியிருந்தார் என்று நான் கேள்விப் பட்டேன். இந்தியா - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாவதில் விடுதலைப் புலிகள் விருப்பமில்லாமல் இருந்தார்கள். 1987 ஜூலை முற்பகுதியில் சில ரகசிய உடன்படிக்கைகள் மூலம் தாஜா செய்யப் பட்டு, புலிகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்யப்பட்டதாக ஒரு பேச்சு உண்டு. பிரபாகரனை பிரதமர் ராஜீவ்காந்தி சந்தித்திருக்கக் கூடாது என்பதே என் கருத்து. 'புலிகள் தலைவரிடம் எழுத்துப்பூர்வ உறுதி மொழி பெற்றீர்களா' என்று கேட்ட போது எரிச்சலடைந்த ராஜீவ், 'அவர் எனக்கு வாக்களித்திருக்கிறார்' என்றார். கடைசியில் கொழும்பில் ஜூலை 29 அன்று ஒப்பந்தம் கையெழுத்தாக இருதரப்பும் ஒப்புக் கொண்டன. அன்று மதியம் 3 மணிக்கு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதைத் தொடர்ந்து இலங்கை அதிபர் ஒரு வரவேற்பு விழா நடத்தினார். அங்கே பி.வி. நரசிம்மரா வும் நானும் விழாவுக்கு அழைப்பட்டிருந்த இலங்கை அரசியல்வாதிகளுடன் பேசிக் கொண்டிருந்தபோது, ராஜீவ் காந்தியும் அதிபர் (ஜே.ஆர்) ஜெயவர்த்தனே வும் தீவிரமாக எதைப் பற்றியோ விவாதித்துக் கொண்டிருந்ததை கவனித்தோம். அன்று இரவே இலங்கையில் ஆட்சி கவிழ்ப்பு நடந்துவிடக்கூடும் என்ற தன் அச்சத்தை ஜெயவர்த்தனே ராஜீவ் காந்தியிடம் தெரிவித் தார். அவருக்கு உதவ இந்தியா தன் படை-களை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டார். சிறிது நேரம் சென்று இதனை அறிந்த நான், 'இந்த விஷயத்தில் கவனமாக செயல்பட வேண்டும். தில்லிக்குச் சென்றபின் மூத்த அமைச்சரவை சகாக்களிடம் ஆலோசித்து முடிவெடுக்கலாம்' என்று ராஜீவ்காந்தியிடம் கூறினேன். ஆனால், அவர் தான் ஏற்கனவே இந்தியப் படைகளை உடனடியாக விமானம் வழியாக கொழும்பு வுக்கு அனுப்புவதற்கான உத்தரவுகளை வழங்கிவிட்டதாக சொன்னார்.

இந்திய அமைதிப் படை ஆகஸ்டில் இலங்கை சென்றது. 'இரண்டே வாரங்களில் புலிகளையும் பிரபாகரனையும் துடைத்தெறிந்துவிடுவோம்' என்று ராணுவத் தளபதி சூளுரைத்தார். அது ஒரு முட்டாள் தனமான சுயதம்பட்டம். இந்திய அமைதிப்படைக்கு யாழ். தீபகற்பத்தைப் பற்றிய புவியியல் குறித்தோ, விடுதலைப் புலிகளின் பதுங்கும் இடங்கள் பற்றியோ விவரங்கள் தரப்பட்டவில்லை. எனவே. போர் நீடித்தது. இந்நிலையில் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை விடுதலை புலிகள் ஆதரிக்க, அவர்களுக்கு இந்திய அரசு ஒரு பெரும் தொகையைத் தர ஒப்புக்கொண்டதாக, 1988 ஏப்ரலில் தகவல் கசிந்தது. இந்த கசிவுக்கு காரணம் தேடியபோது அந்தத் தேடல், இந்தியாவில் உள்ள கொழும்பு தூதரகம் மற்றும் (ராஜீவ் காந்தியின் ஆலோசகர் ஜே.என்.) தீட்சித் வரை சென்றது. அந்தத் தகவல் கசிவு சிக்கலை தீவிரமாக்கும் முயற்சியாகப் பார்க்கப்பட்டது. இறுதியாக முதல் தவணை மட்டுமே தரப்பட்டது. காரணம், ஒப்பந்தம் கையெழுத்தான மூன்று மாதங்களுக்குள் இந்திய அமைதிப்படையும் விடுதலைப்புலிகளும் யாழ்ப்பாணத்தில் போர்புரியத் தொடங்கிவிட்டன.




தொகுப்பும் மொழிபெயர்ப்பும்: நித்திலன்

**புத்தகம் வெளியாவதை விரும்பாத சோனியா:** இந்தப் புத்தகம் வெளிவரப் போகும் தகவலும், இதில் என்னென்ன உள்ளன என்ற தகவலும் கசியத் தொடங்கிய நிலையில், மே 6ஆம் தேதி ஞாயிறு அன்று பிரியங்கா என்னை தொலைபேசியில் அழைத்து, 'உங்களைச் சந்திக்கலாமா' என்று கேட்டார். வரச் சொன்னேன். சோனியா, ராகுல் காந்தி போல் இல்லாமல் பிரியங்கா இயல்பாகப் பேசக் கூடியவர். சொல்ல வந்ததைத் துல்லியமாகச் சொல்வது அவரது பலம். அன்று சந்தித்ததும் அமேதி, ரேபரேலி மற்றும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் அவரது குழந்தைகள் குறித்துப் பேசினோம்… விரைவில் விஷயத்துக்கும் வந்துவிட்டார், பிரியங்கா. அவரது அம்மா சோனியா என்னைச் சந்திக்க அவரை அனுப்பியிருந்தார். நான் அளித்திருந்த பேட்டியை படித்ததாகச் சொன்னவர், 'மே 2004இல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பதவி ஏற்கும் முன்னர் நடந்த விஷயங்கள் குறித்து நான் எழுதுவேனா?' என்று கேட்டார். 'நான் அவற்றை எழுத நினைக்கிறேன். யாரும் என் புத்தகத்தில் உள்ள பக்கங்களை எடிட் செய்துவிட முடியாது. நான் உண்மையை ஒரு போதும் மறைக்கமாட்டேன். கீழ்த்தரமான தாக்குதல்களை நடத்தமாட்டேன். சில அம்சங்களை புறந்தள்ள முடியாது' என்று நான் சொன்னேன். அப்போது… சோனியா காந்தி உள்ளே நுழைந்தார். 'என்ன ஒரு ஆச்சரியம்?' என்று நான் சொன்னேன். அவரது அளவு கடந்த நட்பு ததும்பும் முகம் என்னை தடுமாறவைத்தது. அவர் தன் இயல்பிலிருந்து மிகவும் மாறியிருந்ததாக எனக்குப்பட்டது. தன் கர்வத்தை முற்றிலும் விழுங்கிவிட்டவர் போல் காணப்பட்டார். அது மிகவும் வெளிப்படையாகவே தெரிந்தது.

**AUM WELLNESS CLINIC IN**

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



**Cell: 416.890.9217 Office: 647.304.6046**
**5215 Finch Ave. E. #220, Toronto, ON**

# ஹரி ஆனந்தசங்கரி வேட்பாளராக தெரிவு

பலத்த எதிர்பார்ப்புக்களிற்கிடையே இடம் பெற்ற ஸ்காபரோ ரூச் பார்க் தொகுதிக்கான லிபரல் கட்சியின் வேட்பாளர் தெரிவிற்கான போட்டியில் ஹரி ஆனந்தசங்கரி பெரும் பான்மை வாக்குகளைப் பெற்று வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பெருந்திரளான மக்கள் திரண்டு பொறுமையுடன் காத்திருந்து தமது கட்சியின் உள்ளகத் தேர்தலிற்கான வாக்களிப்பில் கலந்து கொண்டதோடு மண்டபத்தின் வெளியரங்கு நிறைந்த ஆர்வலர்கள் முடிவுகளை அறிவதற்காக காத்திருந்தது இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தைக் எடுத்துக் காட்டியது.




குறிப்பாக ஹரி அவர்களிற்கான ஆதரவாளர்கள் பட்டியலில் வயது முதிர்ந்தவர்கள், இடைவயதினர், இளையோர் என வயது வேறுபாடற்ற தொண்டரணி இடம்பெற்றிருந்ததோடு, அவர்களே இந்த வெற்றிக்கான அடித்தளமாகவும் அமைந்திருந்தனர். ஹரி ஆனந்தசங்கரி அவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உலகத்தமிழர் பேரவை உள்ளிட்ட 85ற்கும் மேற்பட்ட கனடிய தமிழ்ச் சமூகம்சார் தலைவர்களும், கனடியத் தமிழ்க் காங்கிரஸ், அவுஸ்திரேலியத் தமிழ்க் காங்கிரஸ், நாடு கடந்த அரசு போன்ற அமைப்புக்களின் இந்நாள் மற்றும் முன்னாள் தலைவர்களும் ஆதரவளித்து ஹரியை தேர்வு செய்யுமாறு இந்தத் தொகுதியில் மேற்படி கட்சியின் அங்கத்துவம் பெற்ற தமிழ் மக்களைக் கோரியிருந்தனர்.

ஹரி ஆனந்தசங்கரி வெற்றி பெற்ற செய்தியை லிபரல் கட்சியின் உத்தியோகபூர்வ ருவிட்டரில் தெரிவிக்கப்பட்டதானது இந்தத் தேர்தல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் கனடியத் தமிழர்களிற்கான தலைமைத்துவத்தை இந்தக் கட்சி எவ்வளவு தூரம் உன்னிப்பாக கவனிக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டியது.

## GaryAnandasangaree
**It's Our Time.**

கனடா நாட்டின் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளித்து, ஓர் ஜனநாயக நாட்டில் 'விரும்பிய ஒருவருக்கு வாக்களிக்கும் உரிமையைச்' சரியாகப் பயன்படுத்தி, ஸ்கார்போரோ ரூஜ் பார்க் தொகுதியின் நியமனத் தேர்தலில் என்னை அமோக வெற்றி பெற வைத்து, லிபரல் கட்சியின் வேட்பாளராக தெரிவு செய்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் .

எத்தனையோ அழுத்தங்களுக்கும், ஆரவாரங்களிற்கும் மத்தியிலும் நடைபெற்ற ஸ்கார்போரோ ரூஜ் பார்க் தொகுதியின் நியமனத்தேர்தலில் கலந்து கொண்டு, நீங்கள் அளித்த ஒவ்வொரு வாக்குகளும், ஹரி ஆனந்தசங்கரி என்ற எனக்கு ஒரு அமோக வெற்றியைப் பெற்றுத் தந்தது மட்டுமல்லாமல், எமது கனேடியத் தமிழ்ச் சமூகம் ஜனநாயகப் பாதையில் பயணிக்க ஆரம்பித்து விட்டது என்பதை, கனேடிய மக்களிற்கும், கட்சிகளுக்கும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

எமது கனேடிய சமுதாயத்தின் சமூக,பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், எமது தாயகத் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் நான் தொடர்ந்தும் உழைப்பேன் என்பதை உறுதியாகக் கூறுவதுடன், இந்தத் தேர்தலில் எனது வெற்றிக்காக கடுமையாக உழைத்த எனது தேர்தல் பிரச்சாரக் குழுவினருக்கும், என்னை ஆதரித்த உலகத் தமிழ்த் தலைவர்களுக்கும், ஸ்கார்போரோ ரூஜ் பார்க் தொகுதியின் வாக்காளர்களாகிய உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

ஹரி ஆனந்தசங்கரி
லிபரல் கட்சி வேட்பாளர்,
ஸ்கார்போரோ ரூஜ் பார்க்.

Computek College
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

NOW ACCEPTING INTERNATIONAL STUDENTS!



Computek College is approved as a Designated Learning Institution (DLI) by Citizenship and Immigration Canada (CIC)

Enroll in a Diploma Course and receive a FREE Laptop
(Offer valid until Dec 31, 2014)

UNEMPLOYED? UNDEREMPLOYED?
NEW SKILLS!
NEW CONFIDENCE!!
NEW CAREER!!!



SECOND CAREER & OTHER FUNDING, OPTIONS AVAILABLE CALL FOR DETAILS

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES (WEEKEND /EVENING)
Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

WWW.COMPUTEK.EDU
Financial assistance may be available for those who qualify

Toronto Campus
301-2347, Kennedy Rd.
(Kennedy/Sheppard)
416-321-9911

Markham Campus
202 - 7 Eastvale Drive
(Markham / Steeles)
905-471-3344

Scarborough Campus
248-2390 Eglinton Ave E
Kennedy/Eglinton)
416-285-9941

# 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு உங்கள் சாமி அன் சன்ஸ்

# SAMY & SONS

## Wholesalers & Retailers

SINCE 1994

- ☑ வரவேற்பு
- ☑ விலை
- ☑ தரம்

*Textiles, Jewellery, Gift Items & Fancy Goods,*
*Express Money Transfer,*
*Pawn Broker, Chairs Rental Etc.*



- ☑ தெரிவு
- ☑ நம்பிக்கை
- ☑ நாணயம்

## இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அதிரடி மலிவு விற்பனை

**ஆகஸ்ட் 27ம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 27ம் திகதி வரை**

எமது வாடிக்கையாளர்கட்கு! இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!!!

## புதிய வரவுகள்

- சுத்தமான பட்டுச் சேலைகள்
- பான்ஸி சாறிகள்
- சுரிதார்
- தாவணி
- மணப்பெண்ணிற்கான உடுப்புகள்
- பார்டி உடுப்புகள்
- ஸ்கேட்ஸ்
- குருத்தா மேலங்கிகள்
- குருத்தா சூட்ஸ்



## 3 FOR $10.00

பிளவுஸ் / பிறா
ஸ்கேட்ஸ் / நைற்றிஸ்
தைத்த சாறங்கள்
பெனியன் / உள்ளாடைகள்

## EACH $10.00

பால் குக்கர்
அப்பச்சட்டி
புட்டுக்குடம்
ஸ்ரீமர், தோசைச்சட்டி
ஹொட் பொட்
சார்லி, மல்லிகை
வாசனைத்திரவியங்கள்
டெனிம் or டிரெஸ் பான்ஸ்
மந்திர பெட்டி, றிவேஸ் ஹோரன்

10 Cup $20.00



Roti Maker $38.00



Preethi Mix. $150.00




**OPEN 7 Days**
**10:00 am - 9:00 pm**

# Tel: 416-298-1598

Tel: 647-875-5002 Cell: 647-239-SAMY (7269)

**1884 B Kennedy Road (at Ellesmere)**
**Scarborough, Ontario M1P 2L8**

www.samyandsons.com E-mail: samyandsons@gmail.com

அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்

SALE!! SALE!!! SALE!! SALE!!! SALE!! SALE!!! SALE!! SALE!!!

# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

என பல வாக்குறுதிகளை அளித்திருந்தார். இவற்றில் பலவற்றை நிறைவேற்றியது மட்டுமல்லாமல் ரொறொன்ரோ மாநகர-சபை வரவு செலவுத்திட்ட செலவினங்களை ஒரு பில்லியன் டொலரால் குறைத்துள்ளதாக கூறும் Rob Ford அவற்றின் விபரங்களை மிகவும் விபரமாக தனது பிரசார இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

அவற்றில் இருந்து சில பின்வருமாறு: முதல்வரது செலவினங்களை குறைப்பதன் மூலம் $6.4 மில்லியன், மாநகர குப்பை அள்ளுவதை தனியாரிடம் விட்டதன் மூலம் $11.2 மில்லியன், மாநகரசபை உறுப்பினர்களது சம்பள உயர்வு மற்றும் செலவினங்களை குறைத்ததன் மூலம் $753 மில்லியன், தொழிற்சங்கங்களுடன் புதிய ஒப்பந்தங்கள் செய்ததன் மூலம் $138 மில்லியன் என இவ்வாறாக 2011 இல் இருந்து 2014 வரை $972.4 மில்லியன் மாநகரசபையின் செலவினங்களை குறைத்துள்ளதாக இந்த அறிக்கை தரவுகளுடன் கூறுகிறது.

Rob Ford உம் நிலக்கீழ் தொடரூந்து சேவையை Scarborough வரை நீடிக்க வேண்டும் என தனது வாக்குறுதிகளில் கூறிவருகிறார். மே 28, 1969 இல் Robert Bruce Ford எற்றோபிக்கோவில் பிறந்தார். இவரது தந்தையார் Ford, Deco Labels எனப்படும் வருடாந்தம் $100 மில்லியனிற்கு மேல் விற்பனை நடக்கும் நிறுவனத்தின் உரிமையாளர். அத்துடன் அவர் ஒன்ராரியோ பழமைவாதக்கட்சியின் ஒன்ராரியோ நாடாளுமன்ற பிரதிநிதியாகவும் இருந்தவர். Carleton பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் Rob Ford பயின்றவர். 2000 ஆம் ஆண்டில் Renata Brejniak ஐ திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள் Rob Ford மூன்று முறை மாநகரசபை உறுப்பினராக இருந்துள்ளார்.

இவரது செலவினக்குறைப்பு நடவடிக்கைகளான முதல்வருக்கான அலுவலக செலவுகளை முதல்வரது சம்பளத்தில் இருந்து செலவழிப்பது (முதல்வருக்கான செலவினங்களுக்காக வழங்கப்பட்ட மேலதிக பணம் நிறுத்தப்பட்டது), மாநகர-சபை உறுப்பினர்களது மேலதிக செலவினங் களுக்காக (பிரயாணம், கூட்டம், மற்றும் அலுவலக செலவினங்கள்) ஒரு உறுப்பின ருக்கு வழங்கப்பட்ட $200,000 பணத்தை நிறுத்தியது, மாநகர-சபை உறுப்பினர் களுக்கான Limousine சேவை, அவர்களது Club memberships சேவைகளை நிற்பாட்டியது போன்றவை மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றாலும் மற்றைய மாநகரசபை உறுப்பினர்களிடம் இவர்மீது எதிர்ப்பையே தூண்டியது.

இதேபோல் Rob Ford இன் தொழிற் சங்கங்களின் மேலான கடும்போக்கு நடவடிக்கைகளான மாநகரசபை குப்பை அள்ளுவதை தனியாரிடம் ஒப்படைத்து மற்றும் புதிய ஒப்பந்தத்தில் பல சலுகைகளை குறைத்தது போன்றவை மக்களிடையே செல்வாக்கை பெற்றாலும் தொழிற்சங்கங்கள் இவருக்கு எதிர்ப்பையே காட்டுகின்றன.

இவற்றால் இவர்மீது பல நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்களை ஊடகவியலாளர்கள் சுமத்தினர். அவரது தனிப்பட்ட வாழ்க்கையையும் ஊடகவியாலாளர்கள் விமர்ச்சித்தனர். Rob Ford தனது அதீத போதைப் பழக்கத்தை ஒத்துக்கொண்டு அதிலிருந்து விடுபட 2 மாதகாலம் Bala ஒன்ராரியோவில் உள்ள Greene Stone புனர்வாழ்வு நிலையத்தில் (rehabilitation) தங்கியிருந்து சிகிச்சை பெற்றார்.

ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் வேட்பாளர்களில் மூன்றாம் இடத்தில் இருப்பவர் Olivia Chow ஆவர். இவர் புதிய ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக 2006 இல் இருந்து 2014 வரை இருந்தவர். ரொறொன்ரோ மாநகர-சபை முதல்வர் பதவிக்கு போட்டியிடுவதற்காக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தவர். Olivia Chow 15 வருடமாக மாநகரசபை உறுப்பினராக பதவி வகித்தவர். இவர் தனது கொள்கையில் ரொறொன்ரோ மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலை போக்க பேரூந்துகளின் எண்ணிக்கையை 10% ஆல் அதிகரிக்க வேண்டும் எனவும், நிலக்கீழ் தொடரூந்து சேவை ஒரு தேவையற்ற செலவினம் எனவும் கூறுகிறார்.

பாடசாலை சபையின் உறுப்பினராக இருந்த காலத்தில் தான் போதை வஸ்து (Smoking pot) பாவித்ததாக Olivia Chow கூறுயிருக்கிறார். மார்ச் 24, 1957 இல் Hong Kong இல் இவர் பிறந்தவர். கனடாவிற்கு 1970 இல் தனது 13 வயதில் குடிபெயர்ந்தார். University of Toronto இன் கலைப்பட்டதாரியான Olivia, 1988 இல் Jack Layton ஐ திருமணம் செய்தார். Olivia இன் தேர்தல் வாக்குறுதிகளை விமர்சிக்கும் அவரது எதிர்தரப்பு வேட்பாளர்கள் இவரை 'Tax and Spend Socialist' என கூறுகிறார்கள்.






# கிரிக்கெட் வரலாற்றின்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

வீரர்களின் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர் கூறினார். எனவே அவரது சராசரி 100 ஆகவே இருந்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஆரோக்கிய குறைபாடும் மரணமும்: 1928-1948 வரை அவர் அவுஸ்திரேலிய அணியில் விளையாடி பின் ஓய்வு பெற்றார். 1997ம் ஆண்டு அவரது மனைவியின் இழப்பு அவரை மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்தியது. அதற்கு அடுத்த வருடம் டானின் வயது 90யை தொட்டது. உடல் நிலை சரி இல்லாமல் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 2000ம் ஆண்டு புத்தாண்டுக்கு தனது வீட்டுக்கு திரும்பினார். அங்கு 2001ம் ஆண்டு பிப்ரவரி 25ம் திகதி தனது 92 ஆவது வயதில் டான் பிராட்மேன் இயற்கையை எய்தினார். கடந்த 65 ஆண்டுக்கு முன், தனது கடைசி முதல்தர இன்னிங்சில் 115 ஓட்டங்கள் எடுத்தார் பிராட்மேன். இங்கிலாந்து தொடரில் பங்கேற்க கிளம்பும் முன், பயன்படுத்திய மற்றும் அணியினரால் கையெழுத்திடப்பட்ட மட்டை 2013ம் ஆண்டு 40 லட்சத்திற்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது. யாராலும் எளிதில் எட்ட முடியாத பல்வேறு சாதனைகளை படைத்த பிராட்மேன் இவ்வுலகை விட்டு சென்றாலும் அவரது புகழ் இன்னும் இந்த உலகில் நிலைத்து உள்ளது.






# பாத வெடிப்பு குணமாக!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

நம்மில் எத்தனை பேர் கால்களை அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறோம். ‘அழகு என்றாலே முகம்’ ‘நோய் என்றவுடன் உடல்’ தான் எல்லோருக்கும் நினைவில் வரும். ஆனால் கால்களை மறந்து விடுகிறோம். நம்முடைய வேலைகளுக்கு முக்கியமாக பயன்படக்கூடிய பாதங்களை நாம் கவனிப்பதே இல்லை.

பாதத்தை பாதுகாப்பதில் நமது காலணி களின் பங்கு அவசியம். ஒவ்வொருவரும் விதவிதமான காலணிகள் அணிவார்கள். அதிலும் சிலர் அணியாமலும் வேலை செய்வர். இதனால் கால் பாதம் கடினப்பட்டு தோல் வறண்டு வெடிப்பு ஏற்படுகிறது. இதை ஆரம்பத்தில் கவனிக்காமல் விடுபவர்களுக்கு மேலும் தோலில் அதிக ஆழமான வெடிப்பு பாதம் முழுவதும் ஏற்பட்டு விடும். சிலருக்கு வெடிப்புகளில் இரத்தம் வந்து அதிக வேதனையை உண்டாக்கும்.

### பாதவெடிப்பின் காரணங்கள்

பாதவெடிப்பு ஏற்படும் முறைகளை வைத்து அதை இரண்டாகப் பிரிக்கலாம்

1. அதிக வறட்சி
2. அதிக ஈரப்பதம்

இதில் அதிக அளவு பித்த வெடிப்பு ஏற்படுவது தோல் வறட்சியால் தான். பாதம் மிகவும் கடினப்பட்டு இருப்பவர்களுக்கு ஏற்படும் வெடிப்புகள் மிகுந்த வேதனையை உண்டாக்கும். கால்கள் நீரில் இருக்கும்படி வேலை செய்வதாலும், உள்ளங்கால் உள்ளங்கைகளில் வியர்வை உண்டாவதா லும் வெடிப்பு ஏற்படும். இதில் கால்களில் உண்டாகும் ஈரப்பதம் வெளியேற முடியாமல் தோலிலே ஊறி விடுகிறது. தோலானது மிருதுவாகி எளிதில் பாதிப்புக்குள்ளாகிறது. இதனால் பாதங்களில் வெடிப்பு ஏற்படுகிறது. வறட்சியான அல்லது ஈரப்பதமான தோலை பூஞ்சைகள் பாதிக்கின்றன. இந்த இரண்டு நிலையிலும் தோலின் எதிர்ப்பு சக்தி குறைந்து மிருதுவாக அல்லது கடினமாகும் போது எளிதாக பூஞ்சை தாக்குதல் நடைபெறுகிறது.

நீண்ட நேரம் நிற்பதாலும், ஓடுவதாலும் பாதங்கள் கடினப்பட்டு தோல் வெடிப்பு ஏற்படும்.

அதிக உடல் எடை கொண்டவர்கள், கர்ப்பிணிகள், பாரம் சுமப்பவர்களுக்கு கால்கள் தான் உடல் எடையை தாங்குகின்றது. இதனால் பாதம் கடினமாக பாத வெடிப்பு ஏற்படுகிறது.

சிலசமயம் வளர்ச்சி மாற்றத்தால் குதிக்கால் எலும்பில் முள் போன்ற வளர்ச்சி ஏற்பட்டு பாதத்தை அழுத்தும். மேலும் கால் எலும்புகளின் அமைப்பு சரியாக இல்லாம லும், பாத அமைப்பு தட்டையாகவோ அல்லது அதிக பள்ளம் உள்ளதாகவோ இருந்தாலும் நம்முடைய நடை சரியாக இல்லாமலும் இருந்தால் கால் பாதம் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும்.

• வெளியில் சென்று வீடு திரும்பியதும் கால்களை தேய்த்து நன்றாக கழுவ வேண்டும். இதனால் அழுக்கு நீங்கி தோல் இயல்பு நிலை அடையும்.
• அதிக நேரம் நிற்பது, ஓடுவது போன்ற தொழில் உடையவர்கள் அதற்கு தகுந்த மென்மையான காலணிகளை அணிவது அவசியம்

### பாத வெடிப்பின் தீர்வுகள்

• இரவு படுக்கும் முன் பாதங்களை கழுவி வெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் தடவிக் கொள்ளலாம். இதனால் தோல் கடினமாவது தடுக்கப்படுகிறது.
• அதிக சூடான நீரில் குளித்தல் கூடாது. இதனால் வியர்வை சுரப்பிகள் பாதிக்கப்பட்டு தோல் வறட்சி ஏற்படும். மிதமான வெந்நீரில் குளித்தல் நல்லது.
• தோல் வறட்சி உள்ளவர்கள் தினமும்



### தோல் வறட்சி

சில தோல் நோய்களில் வியர்வை சுரப்பிகள் பாதிக்கப்பட்டு தோல் வறட்சி ஏற்படும். மேலும் சர்க்கரை நோய், தைராய்டு சுரப்பு குறைவு, முதுகு தண்டு, இடுப்பு, கால் போன்ற இடங்களில் அறுவை மருத்துவம் செய்யும் போதும் நரம்புகள் பாதிக்கப்படுவ-தால் தோல் வறட்சி எளிதாக ஏற்பட்டு வெடிப்பு உண்டாகிறது.

### காலணிகள்

பலர் கால்களுக்கு பொருந்தாத காலணிகளை அணிகின்றனர். இதனால் விரல்கள் சரியாக இல்லாமலும், பின்புறம் குதிகால் காலணியை விட்டு விலகி வெளியே தள்ளி வருவதும் நடக்கிறது. இதில் அழுத்தம் அதிகம் கிடைக்கும் தோல் பகுதி கடினப்படுகிறது. மேலும் பெண்கள் அணியும் கூர்மையான உயரம் கொண்ட (ஹை ஹீல்ஸ்) காலணிகள் பாதவெடிப்புக்கு முக்கிய காரணமாக உள்ளது. இதில் முதுகுத் தண்டு, இடுப்பு பகுதியில் வலி, கால் வலி போன்றவையோடு கருப்பை இறக்கம் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

#### பாதங்களை பாதுகாக்கும் முறைகள்

• சரியாக பொருந்தும் காலணிகளை அணிய வேண்டும்
• அதிக உயரம் உள்ள காலணிகள் மற்றும் கடினமான காலணிகளை அணியக் கூடாது
• காலணி அணியாமல் நடக்கக் கூடாது

பாதத்தை சுரசுரப்பான தரையில் அல்லது பியூமைஸ் கல்லைக் (pumice stone) கொண்டு தேய்த்தால் தோல் கடினமாவதை தவிர்க்கலாம்.
• இளம் சூடான நீரை பாத்திரத்தில் எடுத்து அதில் சிறிது உப்பு சேர்த்து இரு கால்களையும் உள்ளே 15 நிமிடம் வைப்பதால் பாதத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி தோல் மென்மையாகும். இதை வெடிப்பு உள்ளவர்களும் செய்து வந்தால் மேலும் அதிகமாவதை தவிர்ப்பதுடன் பாத வெடிப்புகளும் மறையும்.
• பாத வெடிப்புள்ள பகுதிகளில் தோலை உரித்து எடுக்கக் கூடாது. இதனால் வெடிப்பு ஆழமாகவும், இரத்தம் வடியவும் வாய்ப்பு உள்ளது. நோய் தொற்றும் ஏற்படும்.
• தோலில் ஏற்படும் தொற்று நோய்களுக்கு பறங்கிபட்டை என்னும் மூலிகையை பொடி செய்து பாலில் கலந்து சாப்பிடலாம்.
• பாத வெடிப்புகளில் வெண்ணெய் பூசலாம்.
• கிளிஞ்சலை நெருப்பில் பதமாக்கி பச்சை நெல்லிக்காய் சாறை அதில் ஊற்றி தோய்த்து எடுக்கவும். பின் விளக் கெண்ணெயை விட்டு அரைத்து எடுக்க மெழுகு போலாகும். இதை வெடிப்புள்ள இடங்களில் தடவி வர பாத வெடிப்பு விரைவில் குணமாகும்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • TREAT WITH MASSAGE THERAP
• SKIN PROBLEM • ALLERGIES
• RESPIRATORY PROBLEMS • SEXUAL PROBLEMS
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • CHOLESTEROL
• BACK PROBLEM /NECK PROBLEM • TUMOR
• TENNIS ELBOW PROBLEM • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4





ஆரோக்கிய வாழ்வு
N. ...
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

# கதை திரைக்கதை வசனம் இயக்கம்

மீண்டும் ஒரு புதியபாதை. திரையரங்கு இருட்டுக்குள் சினிமாவைப் பார்த்து, கதை யுடன் ஒன்றி, மெய்மறந்துவிடும் ரசிகனுக்கு, இருட்டை விலக்கி, அந்த சினிமா எப்படி உருவாகிறது என்பதையும் அதன் அபத்தங்களையும் வெளிச்சமிட்டு காட்டியிருக்கும் படம்!

'கதை இல்லாத கதை' என்றுதான் பார்த்திபன் படத்தை அறிமுகப்படுத்துகிறார். ஆனால், தெளிவான ஒரு நேர்கோட்டு கதை இருக்கிறது. ஒரு இயக்குநரும் அவரது உதவியாளர்களும் இணைந்து ஒரு திரைக்கதையை உருவாக்க நடத்தும் விவாதங்களும், அவர்கள் வாழ்விலும் அவர்களைச் சுற்றிலும் நடக்கும் சம்பவங்களின் பாதிப்புகளில் இருந்து ஒரு திரைக்கதையை அவர்கள் உருவாக்குவதும், அந்தத் திரைக்கதையை படமாக்க ஒரு தயாரிப்பாளரை தேடுவதும்தான் இப்படத்தின் கதை. சேரன், கௌதம்வாசுதேவ மேனன் போன்ற இயக்குநர்களிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய அனுபவம் உள்ளவர் சந்தோஷ். அடுத்து தனியாக படம் பண்ணும் முயற்சிகளில் இறங்குகிறார். இந்நிலையில் இவரது கதையை ஒருவர் திருடி படமெடுத்துவிட, புதிய கதையை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. சந்தோஷை காதலித்து கல்யாணம் செய்துகொள்கிறார் அகிலா கிஷோர். சந்தோஷுக்கு வருமானம் இல்லாத நிலையில் அகிலா வருமானத்தில் குடும்பம் நடக்கிறது. சில உதவி இயக்குநர்களுடன் இணைந்து சந்தோஷ் கதை விவாதத்தில்



ஈடுபடவும் அகிலா வருமானம் போதுமானதாக இருக்கிறது. சந்தோஷின் உதவி இயக்குநர்களில் ஐம்பது வயது கடந்த, இரண்டு பெண்டாட்டிக்காரரான, தம்பி ராமையாவும் ஒருவர். சுனாமி கதை, சிங்கள இனவெறியால் சீரழிக்கப்பட்ட இசைப்பிரியா வின் கதை என இந்தக் குழு ஏகப்பட்ட கதைகளை விவாதிக்கிறது. ஆனால், தற்கால தமிழ் சினிமா ரசிகனின் ரசனை மாறியிருப்பதால் வித்தியாசமான கதையாக இருந்தால்தான் வெற்றிபெற முடியும் என உணர்கிறார்கள். எல்லோருக்கும் திருப்தி யான வித்தியாசமான கதை கிடைக்காமல் விவாதம் மாதங்கள் கணக்காக நகர்கிறது.

தினமும் கதை விவாதம் வீட்டுக்குள்ளேயே நடக்கிறது. இதனால் தங்கள் தாம்பத்யம் பாதிக்கப்படுவதாக உணர்கிறாள் அகிலா. அது தம்பதிகளுக்குள் சண்டையாக உருவாகிறது. இந்நிலையில், செக் மோசடி வழக்கில் கைதாகும் ஒரு தயாரிப்பாளரின் அலுவலகம் காலியாக இருக்க அந்த இடத்துக்கு விவாதத்தை மாற்றுகிறார்கள். அந்த அலுவலகம் எதிர்வீட்டில் ஒரு இளம் பெண். அவள் பார்த்ததுமே சந்தோஷ் மீது காதல் கொள்கிறாள். தனக்கு திருமணம் ஆகிவிட்டதைச் சொல்லி அவளிடமிருந்து விலகுகிறான் சந்தோஷ். அந்தப் பெண் சில சம்பவங்களை முன்கூட்டியே உணரக்கூடிய வளாக இருக்கிறாள். அவளின் இந்தத் தன்மையையும் தன் மனைவியுடனான அனுபவத்தையும் கலந்து ஒரு கதையை உருவாக்குகிறான் சந்தோஷ். தயாரிப்பாளரைச் சந்தித்து கதை சொல்கிறான். கதை. பின்னால் நடக்கும் சம்பவங்களை முன் கூட்டியே உணரக்கூடியவராக இருக்கிறார் ஆர்யா. இவரைக் காதலிக்கிறார் அமலாபால். இருவருக்கும் இடையிலான மண வாழ்க்கை விவாகரத்தில் முடிவதாக உணர்கிறார் ஆர்யா. அப்படி நிகழாமல் இருக்க இருவருமே பிரயத்தனம் செய்கிறார்கள். ஆனால், இதற்காக அவர்கள் அதீத கவனமாக இருப்பதே ஒரு கட்டத்தில் பிரச்சினையாகிறது. அவர்கள் பிரிந்தார்களா இல்லையா என்பதை சொல்லாமலே திரைக்கதை முடிகிறது.

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

ஆனால், இந்த முடிவு கதை கேட்கும் தயாரிப்பாளருக்குப் பிடிக்கவில்லை. முடிவை மாற்றச் சொல்கிறார். சந்தோஷ் அதற்கு தயாராக இல்லை. அதனால், படத்தைத் தயாரிக்கிறேனா இல்லையா என்பதை இரண்டு நாட்கள் கழித்துச் சொல்கிறேன் என்கிறார். இரண்டு தினங்கள் கழித்து அவரேிடம் இருந்து வரும் கைபேசி அழைப்பை

தொடர்ச்சி 28ஆம் பக்கம்


வீடு + வாகனக் காப்புறுதி

இன்றே என்னை அழையுங்கள்
உங்களுடைய வீடு வாகனக் காப்புறுதி
மாதாந்தக் கட்டணத்தைத் தெரிந்து கொள்ள

ஹரி குலசேகரம்
முகவர்
416-826-4298



Allstate
You're in good hands.

Pickering Agency
905-421-0005 ext. 5016
hkulasegaram@allstate.ca

# உப்பு, சீனி, கொழுப்பு உணவுகள் சாப்பிடுவது தப்பு!

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். உப்பு உணவிற்கு சுவையைக் கூட்டுவது என்பது உண்மையேயாகும். ஆனால் அது எமது உணவில் அளவோடு இருக்க வேண்டும். அளவிற்கு மிஞ்சினால் ஆபத்தானதாகவே முடியும். ஒருநாளில் நாம் சாப்பிடும் உணவில் உப்பின் அளவு 5 இலிருந்து 8 கிராமாக இருக்க வேண்டும். அதாவது 1 இலிருந்து 8 கரண்டி தான் நாம் உண்ண வேண்டும். அதற்கு மேற்பட்டால் இரத்த அழுத்தம் அதிகமாக வாய்ப்புண்டு. எனவே உப்பை நாம் கண்டிப்பாகக் குறைத்தே ஆக வேண்டும்.

மேலை நாட்டவர் உணவைச் சமைக்கும் போது உப்பைச் சேர்த்து சமைப்பதில்லை. உப்பைச் சேர்த்து சமைக்காமல் உணவு மேசையில் உப்பும் மிளகுப் பொடியும் வைத்திருப்பார்கள். விரும்பியவர்கள் தமது தேவைக்கேற்ப உப்புப் போட்டே சாப்பிடுவார்கள். அதுவும் போதவில்லை என்றால் மறுபடியும் சேர்த்துக் கொள்வார்கள். உப்பு அதிகமாக உள்ள பொருள்களான வறுவல், அப்பளம், ஊறுகாய் என்பவற்றையும் அசைவ உணவு உண்பவர்கள், உப்பு அதிகம் சேர்த்து காய வைக்கப்பட்ட உலர்ந்த மீனையும் உட்கொள்கின்றனர். அத்துடன் பதப்படுத்தப் பட்ட தகரத்தில் அடைக்கப்படும் உணவு வகைகளை கெட்டுப் போகாமல் இருப்பதற்கு உப்பு அதிக அளவில் சேர்த்தே தயாரிக்கப் படுவனவற்றையும் உண்கிறார்கள். சமைக்கும் உணவில் உப்பு அதிக அளவில் சேர்ப்பதைத் தவிர்த்தால் அல்லது உப்பு அதிக அளவில் சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்களைத் தவிர்த்தால் உட்கொளளும் உப்பின் அளவைக் குறைக்கலாம். அது நமது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது.

இனிப்புச் சுவை பொக்கை வாய் தாத்தாவையும் ஈர்க்கும். குழந்தைகளே அதிக அளவில் இனிப்பிற்கு அடிமை யாகின்றார்கள். சீனி, சர்க்ரை, கற்கண்டு இவை மூலம் இனிப்பு உட்கொள்ளப்படு



கின்றது. சில உணவுப் பொருட்களிலும் இனிப்பு உள்ளது. நாம் உண்ணும் உணவில் காபோவைதரேட் என்ற சர்க்கரைச்சத்து அதிக அளவில் உள்ள உணவுவகைகளை தவிர்க்க வேண்டும். இதற்குப் பதிலாக பச்சைக்காய்கறிகளை அதிகம் உட்கொள்வதினாலும் புரதச்சத்துள்ள உணவு வகைகளை உட்கொள்வதனாலும் காபோவைதரேட் எனப்படும் சக்கரைச் சத்தைக் குறைத்துக் கொள்ளலாம். இனிப்பில் ஊறவைத்த பொருட்களான குலாப்ஜாம், லட்டு, கேக், ஜிலேபி என்பவற்றை சிலர் அதிக அளவில் உட்கொள்கிறார்கள். இனிப்புவகைகள், சொக்லேட், ஐஸ்கிறீம் என்பனவும் சக்கரைச் சத்து அதிகமுள்ளவை ஆகும். தேனீர், காப்பி பானங்களை குறைப்பதனாலும் குளிர்பானங்களைத் தவிர்ப்பதனாலும் சர்க்கரைச் சத்தை குறைத்துக் கொள்ளலாம். இச்சத்து அதிகரிக்கும் போது உடல் பருமன் ஏற்படும். இதனால் சர்க்கரைவியாதி என்ற நீரிழிவு நோய் ஏற்படும். இது உயிர்கொல்லி நோய்களில் ஒன்று. ஆகவே அறுசுவைகளில் இனிப்பு சுவை ஒன்றானாலும் அது எமது உடம்பிற்கு ஊறு செய்யும் என்று கருதி அதனை உட்கொள்ள மறுப்பதனால் எமது உடல் வீறு பெறும் என்பது உண்மையாகும்.

கொழுப்பு ஒரு சத்து எனப்பொருள்படு மாயினும் தம்பிக்கு கொழுப்பு என்றால் அது தலைக்கனத்தையும் குறிக்கும். உடற் கொழுப்பு ஊறுசெய்யும். இரத்தக் குழாய்களில் அடிப்பை ஏற்படுத்துகின்றது. கொழுப்புச்சத்தை ஆங்கிலத்தில் கொலஸ்ரோல் என்பர். இதனை நல்ல கொலஸ்ரோல் HDL என்றும் கெட்ட கொலஸ்ரோல் LDL எனவும் இரண்டு வகையாகப்பிரிப்பர். மொத்த கொலஸ்ரோல் அளவு 200 மி.கிராமுக்கு மேல் இருக்கக் கூடாது. கெட்ட கொலஸ்ரோல் 160 மி.கி வரை இருக்கலாம். இது கூடினால் இருதயதாக்கம் ஏற்படும். கொழுப்புச்சத்து எப்படி நல்லதாக இருக்கமுடியும்? நல்ல கொலஸ்ரோல் செய்யும் வேலை என்ன வென்றால் எமது உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் படிமானம் ஏற்படச் செய்யும் கெட்ட கொலஸ்ரோல் 50மி.கி மேல் அகற்றுவது தான். நல்ல கொலஸ்ரோல் 50மி.கி மேல் இருப்பது நல்லது. இதற்கு கீழ் காணப்பட்டால் தியானம் மற்றும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் அதனை அதிகரிக்கலாம். சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு, உடற் பருமன், புகைப்பிடித்தல் என்பவற்றால் கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கும் வாய்ப்புண்டு. இதன்விளைவு ஹாட் அற்றாக் ஆகும். இது வராமல் தடுப்பதற்கு இதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.



நா. க. சிவராமலிங்கம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்




- எல்லா வகையான காப்புறுதித்திட்டங்களும், அரச உதவி திட்டங்களும் (ODSP, Social Service) ஏற்றுக்கொள்ளப்படும்.
- தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## எமது சேவைகள்

- நீண்ட நேரம் நிற்பதால் உங்கள் பாதங்கள் சோர்வடைகின்றனவா?
- தரமான பாதணிகள் இன்மையால் நடக்க, வேலை செய்ய கஷ்டப்படுகின்றீர்களா?
- நீரிழிவு , இரத்த ஓட்ட குறைபாட்டினால் ஏற்படும் விறைப்பு வலியால் அவதிப்படுகின்றீர்களா?
- பித்த வெடிப்பு, நகச்சுற்று மற்றும் பாத தோல் பிரச்சனைகளினால் அவஸ்த்தைப்படுகின்றீர்களா ?
- மூட்டுவலி, பாதவலியால் வருந்துகின்றீர்களா?
- ஆணிக்கூடு, பித்த வெடிப்பு மற்றும் பாத தோல் பிரச்சனைகள்
- நகச்சுற்று மற்றும் நகத்தில் ஏற்படும் பிரச்சனைகள்
- கணுக்கால், முழங்கால், குதிக்கால் போன்றவற்றில் ஏற்படும் வலிகள்
- நீரிழிவு நோய் பராமரிப்பு
- தட்டையான பாதம், வளைவு கூடிய பாதம் மற்றும் அனைத்து பாத அசாதாரணங்கள்

Our Services

- Custom Made Orthotics and Orthopedic Footwear
- Comfortable, Modern, Therapeutic Footwear
- Compression Stockings, Ankle, Knee and Back Braces

அனைத்து சேவைகளுக்கும் அழையுங்கள்
Call for appointments:
(905) 471-4000

25 Karachi drive, unit 29A
Markham, ON L3S 0B5
Email: solesolutions@hotmail.com


கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். யோவேல் 2:21
உங்கள் கண்ணீர் துடைக்கப்படும்
செப்டம்பர்
11, 12 வியாழன், வெள்ளி
மாலை 7:00 மணி
13, 14 சனி, ஞாயிறு
மாலை 6:00 மணி
இடம்
MIRACLE FAMILY TEMPLE
1100 BELLAMY ROAD
SCARBOROUGH
Bellamy & Ellesmere
சிறப்புச் செய்தியாளர்கள் (அன்பரின் ஊழியம் இந்தியா)
Rev.Dr.A. ஜாஷ்வா
Dr. ஜேன் ஜாஷ்வா
Dr. ஆனந்த ஸ்திரா
வாருங்கள்! பங்கு பெறுங்கள்!! ஆசீர்வாதம் பெறுவீர்கள்!!!.
யாவும் இலவசம் 416-439-7000, 416-439-7001

# Parkway Mall Mobilicity Back-To-School SALE !!

$50 OFF COUPON

~~$45~~

# $29/mo

save $16/mo. Life Time Deal. No Contract.

## UNLIMITED Talk, Text & Data

FREE Long Distance

**UNLIMITED** Local Calling, Canada & US Long Distance

**UNLIMITED** Canada & International Text messaging

**UNLIMITED** Internet & Mobile-Hotspot

**FREE** Caller ID, Voice Mail, Call Waiting and more



| Nokia 3555 | Samsung T469 | LG MyTouch Q | Samsung Galaxy Exhibit | LG G2x | Samsung Galaxy S4 |
|---|---|---|---|---|---|
| ~~$79.99~~ | ~~$99.99~~ | ~~$199.99~~ | ~~$199.99~~ | ~~$199.99~~ | ~~$649.99~~ |
| $0 | $0 | $69.99 | $79.99 | $79.99 | $369.99 |

No Contract !!
No Credit Check !!

## PHONES $50 OFF

You can bring in your own phone

ONLY at

**Mobilicity @ Parkway Mall** (Kiosk beside Metro Supermarket)
**Parkway Mall** (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, **416-999-9229**

mobilicity
Now that's smart.™

# புகலிடம் புகுந்த நாட்டின் புராதன வரலாற்றினை புகட்டும் கனடாவின் கதை நூல் விமர்சனம்

பிறந்த பொன்னாடான ஈழத்திலிருந்து எம்மை வந்தேறு குடிகளான சிங்களவர்கள் விரட்டி அடித்ததினால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்குடன் புகலிடம் நாடி ஓடி வந்த எம்மை வரவேற்று, நல்வாழ்வு தந்து மகிழ்வுடன் வாழ வைத்துள்ள கருணை கொண்ட நாடு கனடா. ஒவ்வொரு நாட்டினரும் தத்தமது நாடுகளின் புராதன வரலாற்றினை அறிந்திருக்க வேண்டியது அவசியம். கனடாவுக்கு புலம் பெயர்ந்து வரும் மக்களுக்கு முதலில் தற்காலிக வதிவிட உரிமை வழங்கப்படுகின்றது. பின்னர் நிரந்தரப் பிரஜை களுக்கான பிரஜா உரிமை வழங்கும் போது கனடாவின் புராதன வரலாறு பற்றிய கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஆங்கில அறிவு குறைந்த நம்மவர்கள் இவ்விவகாரங்களை அறிந்து கொள்ளக் கூடிய தமிழ் நூல்கள் எதுவும் இதுவரை இல்லாதிருந்து வந்தது. இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் கல்விமானும், கல்லூரி அதிபருமான கொழும்புத்துறையைச் சேர்ந்த துறையூரான் என்ற புனைபெயரினைக் கொண்டுள்ள திரு.சின்னையா சிவநேசன் அவர்கள் அண்மையில் 'கனடாவின் கதை' என்ற பயனுள்ள நூலை எழுதி வெளியிட்டுள்ளார். முதலில் விளம்பரம் பத்திரிகையில் தொடர் கட்டுரையாக எழுதி வந்த அவர் பின்னர் அவற்றினைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். கோப்பாய் கிறீஸ்த்தவ



தொடர்ச்சி 36ஆம் பக்கம்







A new spirit of living in
Islington Village
(Bloor & Islington)
OPEN HOUSE
September
7
TRIDEL HEAD OFFICE,
4800 Dufferin Street, North York
Time : 1.00 PM to 5.00 PM
All Are
WELCOME
COMING SOON
416.321.6969
TRIDEL®
BUILT FOR LIFE
HOMELIFE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969
Fax: 416-321-6963
*Independently Owned and Operated

# ஐம்பூத வெண்பா

கடந்த இதழ் தொடர்ச்சி

## நெருப்பு



நெற்றிக்கண் தன்னில் நிகரிற் கதிரவனில்
சுற்றும் புவிதன்னுள் சூழ்வானில் - மற்றும்
கரிக்குள் நிலநெய்யுள் கல்லுள் கலந்தே
இருக்குந்தீக் கில்லை எதிர். (17)

மனிதன் இடிமுழக்க வானத்தின் மின்னல்
கனலைத்தான் முன்னாகக் கண்டான் - பினர்தன்
வயிர மரவீட்டி வன்கல்லைத் தேய்க்கும்
செயலாலே மூட்டினான் தீ. (18)

(மரவீட்டி - மர ஈட்டி.)

கடவுள் திருக்கரத்தில் காட்டும் கனல்நம்
உடலுள்ளும் உண்டாம் உணர்வால் - கடலுள்ளும்
உண்டென்று கண்டார் உயர்ந்தோர் உருவான(து)
அண்டமும் தீயால் அறி. (19)

தாயின்றி அன்பில்லாத் தன்மைபோல் தாரணியில்
வாயின்றி இல்லாத வாழ்க்கைபோல் - தீயின்றிச்
சத்தி செயலூக்கம் தாகம் பசிதீர்த்தல்
பத்தி பரவேள்வி பாழ். (20)

முன்னர் வெறிபிடித்த முப்புரத்தை வீழ்த்தியதும்
பின்னர் அறிவிழந்த தென்னிலங்கை - தன்னை
முடித்ததுவும் அப்பால் முறைபிழைத்த பாண்டியனை
அடித்ததுவும் தீயின் அறம். (21)

நீர்வெள்ள மானாலும் நீந்திப் பிழைத்திடலாம்
போர்செய்யும் காற்றும் பொறுத்திடலாம் - யார்தானும்
தாண்டவோ தப்பவோ சாலாது தாவிவரும்
காண்டா வனத்தீயைக் காண். (22)

(சாலாது - இயலாது. காண்டாவனத் தீ - அடங்காத காட்டுத்தீ.)

அகத்தியரைப் பெற்றவளும் ஆற்றல்வேல் ஆறு
முகத்தவரைப் பெற்றவளும் முன்னாள் - மிகப்பயந்து
நீருள் ஒளித்த அசுரர்களை நேர்மையுடன்
சீருறவே காத்தவளுந் தீ. (23)

பக்குவமாய் அக்கினியைப் பாவிக்க வல்லவர்கள்
விக்கினங்கள் இன்றி விரும்பியவை - தக்கவண்ணம்
பெற்றுப் பெருவாழ்வு பீடுறவே வாழ்வார்தம்
சுற்றமும் சூழத் தொடர்ந்து. (24)

**தொடரும்...**



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -

விளம்பரம்
பத்திரிகையை
இணையத்தளத்தில்
வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP
A FAST TRACK PROGRAM
Starts September 03, 2014
GRADE 11 & 12 Only!
Get Ready Before School &
SCORE HIGH!
PROVEN! - HIGH RESULTS!! - ONE MONTH TRAINING!!!
Covers Entire Curriculum - 21 Years Experience
416-666-5515
Regular Classes Starts in September 2014

# கனடா வருகிறேன்! இமான் அண்ணாச்சி

'குட்டிஸ் சுட்டீஸ்', 'அசத்தப் போவது யார்' என்று சின்னத்திரை நிகழ்ச்சிகளில் அசத்திக்கொண்டிருந்த இமான் அண்ணாச்சி இப்போது பெரியதிரையிலும் அசத்திக் கொண்டிருக்கிறார். சின்னத்திரை நிகழ்ச்சி தொகுப்பாளர், நகைச்சுவை நடிகர், குணசித்திர நடிகர் பாத்திரங்களைக் கடந்து தயாரிப்பாளர் அவதாரம் எடுத்துள்ளார். துரை. செந்தில்குமார் இயக்கத்தில் சிவகார்த்தி கேயன் நடிக்கும் 'டாணா' படத்தின் தயாரிப்பாளர் நம்ம அண்ணாச்சிதான். இந்தப் படத்தில் நடிக்கவும் செய்கிறார். 'அதுக் காகத்தானே ஊரில் இருந்து வந்தோம்' என்று நம்மைக் கலாய்த்த அண்ணாச்சியை 'டாணா' படப்பிடிப்பில் சந்தித்தோம்.

சின்னத்திரையில் உங்களைப் பார்த்ததில் இருந்து தெரியும், அதற்கு முன்பான உங்கள் வாழ்க்கை பற்றி சொல்லுங்கள்?

என் சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பக்கத்தில் திருவாழியப்பன் நாடார் விளை. படிப்பு எட்டாம் வகுப்பு வரைத்தான். படித்தது போதும் என்று என் அப்பா மளிகை கடையில் பொட்டலம் மடிக்க அனுப்பி விட்டார். மளிகை கடை, பாத்திரக்கடை, காய்கறிகடை, ஒய்ன்ஷாப் என்று நான் பார்க்காத வேலையே கிடையாது. எனக்கு சின்னப் பிள்ளையிலிருந்து நாடகம், சினிமா மீதும் மோகம் அதிகம். நான் பேசுவதை பார்த்து எங்க ஊரில் உள்ளவர்கள், 'ஏய் நீ சினிமாவுக்கு போடே' என்பார்கள். உள்ளுக்குள் இருந்த ஆசை நெருப்புக்கு அவர்கள் தங்கள் பங்குக்கு நெய் ஊற்றினார்கள். நெருப்பு தீயானதும் கையில் சேர்த்து வைத்திருக்கும் காசை தூக்கிக் கொண்டு சென்னைக்கு வருவேன். சென்னைக்கு வந்து சேர்ந்ததும் முதலில் ஊருக்கு திரும்ப போவதற்கான காசை எடுத்து தனியா வைத்துவிடுவேன். திரும்பிப் போக காசு இல்லாமல் நின்றுவிடக் கூடாது பாருங்கள். அடுத்து சினிமா வாய்ப்பு தேடி அலைவேன். இப்படி பலமுறை மஞ்சள் பையோட சென்னை வந்து மஞ்சள் காமாலை நோயோடு ஊருக்கு திரும்பியது தான் மிச்சம்.

